ஓசை: 25 குரல்: 180 வெள்ளிக்கிழமை 17 டிசம்பர் Friday 17th December 2021 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760






www.facebook.com/Thinakkural | www.twitter.com/ThinakkuralNews | email: daily@thinakkural.lk | www. thinakkural.lk

# தினக்குரல்

An Independent Daily Voice In Tamil

Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021

25th ANNIVERSARY

பக்கம்: 12 | விலை: 30




# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பு

## அரசு ஆராய்கிறது

ந.ஜெயகாந்தன்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2017 ஆம் ஆண்டில் நடை பெற்றதுடன், அதன்மூலம் அமைக் கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் நிறைவுக்கு வரவுள்ளன. இதன்படி பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான அறிவித்தலை விடுக்க வேண்டும்.

இந்நிலையில் தற்போதைய நிலைமையில்

பக்கம் 04

# நல்லூரில் 'இந்து'க்களாக சீன தூதுவரும் அதிகாரிகளும்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் மற்றும் தூதரக அதிகாரிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு களில் ஈடுபட்டார்.

நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் வழி பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆல யத்திற்கு வருகை தந்திருந்த அவர்கள், இந்து

பக்கம் 04



# புலிகள், பொதுபல சேனா, சிங்ஹலே பதிவுகளுக்கு பேஸ்புக் தடை விதிப்பு

பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள், பொதுபல சேனா அமைப்பு மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் 'சிங்ஹலே' அமைப்பு தொடர்பில் எந்தவொரு பதிவையும் இடுவது பேஸ்புக்கினால் தடைசெய் யப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் இடம்பெறும் வகைப்படுத்தல்கள் மற்றும் அது தொடர்பான

பக்கம் 04

# வைத்தியர் ஷாஃபிக்கு நிலுவைக் கொடுப்பனவு வழங்கி பணியில் அமர்த்துமாறு பணிப்பு

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்ப் பிணிப் பெண்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை செய்ததாக குற்றச்ச ாட்டப்பட்டு கட்டாய விடுமுறை யில் அனுப்பப்பட்டிருந்த குருநா கல் போதனா

பக்கம் 04

# நாட்டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப நாம் தயார்

## அநுரகுமார தெரிவிப்பு

ந.ஜெயகாந்தன்



மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களுடன் நாட் டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டி யெழுப்பும் சவாலை பொறுப்பேற்க தேசிய மக்கள்ச க்தி தயாராக இருக்கின்றது என்று ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 04

# நாட்டில் 4 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி

## மேலும் அதிகரிக்கும் சாத்தியம் குறித்து எச்சரிக்கை

க.பிரசன்னா

தென்னாபிரிக்காவில் முதன் முறை யாக அடையாளம் காணப்பட்ட ஒமிக் ரோன் வைரஸ் திரிபினால் பாதிக்கப் பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை நான்காக

பக்கம் 04




# காணி உறுதி பத்திரப் பிரதிகளை இணையவழியில் பெறமுடியும்

உறுதிப் பத்திர பிரதிகளை வழங்குவதற்கு இணையவழி முறைமை நேற்று வியாழக்கி ழமை ஆரம்பிக்கப்பட்டிருப்ப தாக பதிவாளர் இணைக்களத் தின் பதிவாளர் நாயகம் டபிள் யூ .எம் .எம் .பி . வீரசேகர தெரிவித்துள்ளார்

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின்பிர திகளைப் பெறுவது ஆகஸ்ட் 2 முதல்இணையத்தளமூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத் து காணிப் பதிவேடுகளிலி ருந்தும் மக்கள் அதிகபட்சமாக ஐந்து பிரதிகள் மற்றும்

பக்கம் 04

# வடக்கு- சீனா உறவு வலுப்பெறும் அதன் ஆரம்ப புள்ளியே எமது உதவி

## யாழில் உதவிகளை வழங்கிவைத்து சீன தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்துக்கான எங்கள் விஜயம் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வடக்கு சீன உறவின் ஆரம்ப புள்ளியே எனத் தெரிவித்த இலங்கைக் கான சீன தூதுவர் கீ சென்ஹொங், வடக்கு மக்களுக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு எதிர்கா லத்தின் மேலும் மேம்படும் என நம்புவதாகவும் கூறினார்.

சீன அரசாங்கம்

பக்கம் 04



செலான் வங்கியிடமிருந்து
நிலையான வைப்புகளிற்கு உயர்ந்த வட்டி

| வைப்புக்காலம் | வருடாந்தவட்டி | AER (வ.வி.வ) |
| --- | --- | --- |
| 6 மாதம் | 5.50% | 5.58% |
| 12 மாதம் | 6.50% | 6.50% |

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0112008888 ஐ அழைக்கவும்

Brand Finance Rating "A +" Fitch Rating. "A" (lka)
கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

# சிலிண்டரில் கலவை மாற்றம்; சட்ட நடவடிக்கை எடுக்காவிடில் சத்தியாக்கிரக போராட்டம்

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர்

க.பிரசன்னா

வீட்டு எரிவாயு சிலிண்டரில் ஏற்படுத் தப்பட்டுள்ள கலவை மாற்றம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்ப டாவிட்டால் பல்வேறு இடங்களில் சத்தி யாக்கிரக போராட்டத்தை முன்னெடுப்ப தற்கு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத் தின் தலைவர் அசேல சம்பத்

பக்கம் 04



## மாதம்பை விபத்தில் தாய்,மகன் பலி

கற்பிட்டி நிருபர்

மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் தாயும், மகனும் உயிரிழந்துள்ளனர்.

கந்தானை களுவா இருப்புவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய மகனும், 54 வயதுடைய தாயுமே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும், மகனும் மோட்டார் சைக்கிளில் அநுராதபுரத்திற்கு சென்றுவிட்டு, மீண்டும் கந்தானை பகுதியை நோக்கிப் பயணம் செய்த போது மாதம்பை ஈரட்டக்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள பெரிய மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது, படுகாயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவ்விருவரும் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் கூறினர்.

# எழிலன் உட்பட காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்கின் தீர்ப்பு பெப். 14 ஆம் திகதி அறிவிப்பு

## சிரேஸ்ட சட்டத்தரணி ரட்ணவேல் தெரிவிப்பு

வவுனியா நிருபர்

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல்போனவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டதாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றால் நேற்று வியாழக்கிழமை அறிவிக்கப்படவிருந்த நிலையில் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இறுதிப்போரின் கடைசி நாட்களில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவிற்கான தீர்ப்பு இன்றையதினம் (நேற்று )வழங்கப்படவிருந்தது. இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று அந்த நீதிமன்றம் ஒரு அறிக்கையினை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மீதான வவுனியா மேல்நீதிமன்றின் தீர்ப்பு இன்று (நேற்று )வழங்கப்படுவதாக நியமிக்கப்பட்டிருந்தது.



எனினும் அந்தத்தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல்நீதிமன்றம் இன்று (நேற்று )எமக்கு அறிவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி இந்த உத்தரவு அறிவிக்கப்படும் என்ற விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு இலங்கை இராணுவத்திற்கும், அரசாங்கத்திற்கும் சட்டமா அதிபருக்கும் எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தமக்கள் காணாமல் போனமை தொடர்பாக இலங்கை இராணுவமும் அரசாங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற விடயத்தினை கருப்பொருளாக கொண்டு இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் இராணுவத்தின் சார்பாக அவர்களுடைய சட்டத்தரணிகள் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர். அத்துடன் சட்டமாஅதிபர்திணைக்களத்தை சேர்ந்த சிரேஸ்ட அரசசட்டவாதி யொகான் அபேவிக்கிரம பிரசன்னமாகியிருந்தார். வழக்கினை தாக்கல்செய்த மனுதாரர்களான வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் ஏனைய காணாமல்போனவர்களின் குடும்பத்தினரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

## ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பலி

முள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை பிரிமா தொழிற்சாலையிலிருந்து சீனவ நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டு நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் சீனக்குடா கொட்பே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்து சந்தேக நபர்கள் மூவருக்கு பிணை

முள்ளிப்பொத்தானை நிருபர்

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவர் திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைதான படகுப்பாதை உரிமையாளர் உள்ளிட்டோரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு சந்தேக நபரான கிண்ணியா நகரசபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம், கடந்த 10ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியா வைத்தியசாலை தாதிகள் போராட்டம்

மூதூர் நிருபர்

அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் பல கோரிக்கைகளை முன் வைத்து நேற்று வியாழகிழமை சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கிண்ணியா ஆதார வைத்தியசாலை தாதியர்கள், உத்தியோகத்தர்களும் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை தாதியர்கள், உத்தியோகத்தர்களின் இந்த போராட்டத்தினால் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வந்த நோயாளிகள் பலர் சிரமங்களை எதிர்நோக்கினர்.

## மஸ்கெலியா பிரதேசசபை உபதலைவர் மீது தாக்குதல் நடத்திய இரு உறுப்பினர்கள் கைது

பொகவந்தலாவ நிருபர்

மஸ்கெலியா பிரதேசசபையின் உபதலைவர் பெரியசாமி பிரதீபன் மீது தாக்குதல் மேற்கொண்ட இரண்டு உறுப்பினர்களை கைது செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்

புதன்கிழமை இரவு இந்த கைது இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி மஸ்கெலியா பிரதேசசபையின் உபதலைவர் பெரியசாமி பிரதீபனை சபைஅமர்வின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரும் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் உறுப்பினர் ஒருவரும் தாக்கிய சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டது. இந்நிலையில் தாக்குதலினால் காயங்களுக்கு உள்ளாகிய மஸ்கெலியாபிரதேசசபையின் உபதலைவர் பெரியசாமி பிரதீபன் வைத்தியசாலையில்அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த மஸ்கெலியா பொலிஸாரால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினரும் மஸ்கெலியா பிரதேசசபை உறுப்பினருமான பி.அனந்தராஜ், மற்றும் மஸ்கெலியா பிரதேசசபையின் ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் உறுப்பினர் எஸ்.ஏ.திஷாநாயக்க ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் கைது செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்களையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கைஎடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# கடற்றொழில் நீர்வேளாண்மை அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் டன் சீனத் தூதுவர் கலந்துரையாடல்

## கடற்றொழிலாளருக்கு 20 மி.ரூபா வாழ்வாதார உதவி

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி செல் ஹொங், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், குறித்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.



இங்கு கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், மக்களுக்கு வளமான எதிர்காலத்தினை பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில் நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாக கூறினார். அதே வேளை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி செல் ஹொங், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.%5 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளையும் 6 மில்லியன் ரூபா பெறுமதியான வலைகளையும் வழங்கியுள்ளார்.

## கொழும்பு மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் 79 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### ஆதரவு 90; எதிர்ப்பு 11

கொழும்பு மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் 79 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மாநகரசபையில் மொத்தமாக 119 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்ற நிலையில் வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக 90 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. 18 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரத்தின் கீழ் செயற்படும். கொழும்பு மாநகரசபையின் 2022 வரவு செலவு திட்டம் மாநகர மேயர் ரோசி சேனாநாயக்கவினால் புதன்கிழமை காலை 10 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அதன் மீதான விவாதம் இடம்பெற்றது. இரவு 9 மணிவரை இடம்பெற்ற விவாதத்தின் பின்னர் இரவு 9 மணிக்கு வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடுபட்டது.

இதன்போதே வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக 90 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

# டெங்கை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

ந.ஜெயகாந்தன்

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த தேவையான விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

டெங்கு காய்ச்சலால் இந்த வருடத்தில் நவம்பர் மாதம் வரைக்கும் 25,910 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 19 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு, மிகவும் ஆபத்தான நிலையை எட்டியுள்ள டெங்கு நோய்ப் பரவல், பருவப் பெயர்ச்சி மழைகாலத்தில் மேலும் அதிகரிக்கும் போக்குக் காணப்படுவதால், தொற்று நிலைமையைத் தடுப்பதற்கான குறித்த அனைத்துத் தரப்பினரின் பங்குபற்றலுடன் அமைச்சின் ஊடாக ஒன்றிணைந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை நிரந்தரமாக மேற்கொண்டு செல்வதற்கு அனைத்து நிறுவனத்திலும் அதற்கென ஒரு அலுவலரை நியமித்தல், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் விடயங்களை மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொறுப்புக்களை ஆளுநர்களுக்கு ஒப்படைக்கவும், டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக தற்போது காணப்படும் சட்ட ஒழுங்குகளை இற்றைப்படுத்தவும், டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பு செய்வதற்கான பொறுப்பை தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவுக்கு ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# அரசு ‘தரம்’ இல்லாததாலேயே இலங்கைக்கு தரமற்ற பொருட்கள் அனுப்பி வைப்பு ; ஐ.தே.க. தெரிவிப்பு

ந.ஜெயகாந்தன்

அரசாங்கம் தரமானதாக இல்லாத காரணத்தினாலேயே வெளிநாடுகளில் இருந்து தரமற்ற உரம் மற்றும் எரிவாயு என்பன இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றிய அந்தக் கட்சியின் செயலாளர் பாலிதரங்கேபண்டாரவே இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை அரசாங்கம் தரமற்றது என்பதனை இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் நாடுகள் புரிந்துகொண்டுள்ளன. இதனாலேயே அந்த நாடுகளின் குப்பைகளை இங்கே அனுப்பும் நிலை உருவாகியுள்ளன. இந்த அரசாங்கத்தின் எந்த வேலையும் தரமானதாகவே இல்லை.

இதேவேளை இந்த அரசாங்கம் வந்த நாள் முதல் இதுவரையில் மக்களை துன்பத்திற்குள் தள்ளும் செயற்பாடுகளையே முன்னெடுத்துள்ளதே தவிர, மக்களுக்கு நிவாரணங்களை கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றார்.

## பிணையில் விடுதலையான கவிஞர் அஹ்னப் மீண்டும் சிறைக்கு சென்றார்

கற்பிட்டி நிருபர்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எழுத்தாளர் , கவிஞர் அஹ்னப் ஜஸீம் புத்தளம் மேல்நீதிமன்றத்தினால் புதன்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்ட போதும் அவர் மீண்டும் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

'நவரசம்' எனும் கவிதைப் புத்தகத்தில் உள்ள 'உருவாக்கு'எனும் கவிதை மூலம் தீவிரவாத செயற்பாட்டை ஊக்குவித்தார் எனும் குற்றச்சாட்டின் கீழ் கவிஞர் அஹ்னப் ஜஸீம் கடந்த வருடம் மே மாதம் 16 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், கொழும்பு 8 இலக்க நீதவான் நீதிமன்றத்தில், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7 (2) அத்தியாயம் பிரகாரம் முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறு தொடர்ச்சியாக விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹனப் ஜஸீம், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் புத்தளம் மேல்நீதிமன்றத்திற்கு, வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், புதன்கிழமை புத்தளம் மேல்நீதிமன்றத்தில் அவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவரை ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப்பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் முதலாவது மற்றும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் புத்தளம் ரி.ஐ.டி பிரிவில் ஒப்பமிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றினை மையப்படுத்தி, புத்தளம் மேல்நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்ட கவிஞர் அஹ்னப் ஜஸீம் மீண்டும் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

## வெளிநாட்டு அமைச்சருடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை நேற்று வியாழக்கிழமை வெளிநாட்டு அமைச்சில் வைத்து சந்தித்து, இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடினார். தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பரஸ்பர ஒத்துழைப்பு சார்ந்த விடயங்கள் மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அண்மைய இந்திய விஜயத்தின் விளைவுகள் தொடர்பான விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

# ஐ.நா.சபையுடனான இலங்கையின் நெருக்கம் எதிர்காலத்திலும் தொடரும்

## ஐ.நா. உதவி பொதுச் செயலரிடம் பிரதமர் உறுதி



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா பிரதமர் மஹிந்த ராஜபக்சவை புதன்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தார்.

குறித்த சந்திப்பின்போது இலங்கையில் செயற்படுத்தப்படும் கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டன.இதன்போது

இலங்கையில் மிகச்சிறந்த தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் காணப்படுகிறது என கன்னி விக்னராஜா குறிப்பிட்டார்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள பல நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாக இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தடுப்பூசி ஏற்றல் செயற்பாடுகளின்னூடாக சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரிக்கும் என தான் எதிர்பார்ப்பதாக கன்னி விக்னராஜா நம்பிக்கை வெளியிட்டார்.

கொவிட் 19 தொற்று நிலைமைக்கு பின்னரான பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடிய கன்னி விக்னராஜா இலங்கைக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு பல வழிகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையுடன் மிக நெருக்கமாக பணியாற்றியுள்ளதாக சுட்டிக்காட்டிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அது எதிர்காலத்திலும் தொடரும் என தெரிவித்தார்.

குறிப்பாக தனியார் துறையில் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதன் அவசியம் மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பிற்கு இளைஞர் யுவதிகளை ஊக்குவிப்பதன் அவசியம் என்பன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே இலங்கைக்கு உதவி வருவதாக கன்னி விக்னராஜா பிரதமரிடம் தெரிவித்தார்.

இலங்கையின் நிலையான அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்புடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் க்மீசக இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி றொபர்ட் ஜுகாம் இதன்போது பிரதமருக்கு விளக்கமளித்தார்.

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்

பதுளை நிருபர்

பண்டாரவளை ஹப்புத்தளை பிரதான வீதியில் பங்கட்டி என்ற இடத்தில்நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3மணியளவில் காரொன்று விபத்திற்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. ஹப்புத்தளைப்பொலிஸார், இவ் விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர். கார் பாதையை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்திற்குள்ளானது.

# கெப் வாகனம் மின் கம்பத்தில் மோதி விபத்து

தம்புள்ள நிருபர்

கெப்வாகனமொன்று மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதில் கலேவெல பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கலேவெல பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வீதியை விட்டு விலகி கெப் வாகனம் வீதியோர மின் கம்பம் ஒன்றில் மோதியதில் இரண்டு மின் கம்பங்கள் உடைந்து சேதமடைந்ததுடன் மின் கம்பிகளும் தீப்பற்றி எரிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தில் சுமார் 5 மணி நேரம் மின் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் வேறு சில பிரதேசங்களுக்கு இரவு 8 மணிக்குப் பின்னரும் நிலைமை சீராகியிருக்கவில்லை.

கொழும்புப் பிரதேசத்திலிருந்து தம்புள்ள நோக்கி சாரதி உள்ளிட்ட மூவருடன் பயணித்த கெப் வாகனமே இவ்வாறு மின் கம்பத்தில் மோதிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

# பல கோரிக்கைகளை முன்வைத்து கிழக்கு மாகாண சுகாதாரத்துறையினர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

திருக்கோவில் நிருபர்




கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர் உத்தியோகத்தர்கள் மற்றும் நிறைவுகாண் மருத்துவ உத்தியோகத்தர்கள், துறைசார் நிபுணர்கள் ஒன்றிணைந்து பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து காந்தி பூங்கா வரையில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டினையடுத்து ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சுகயீன விடுமுறையை அறிவித்துவிட்டு நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் முன்னால் ஒன்றிணைந்து காலை 10 மணிக்கு அங்கிருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு ஆரம்பித்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் அங்கிருந்து கோவிந்தன் வீதிவழியாக மட்டக்களப்பு பிரதான பஸ்தரிப்பு நிலையம் சென்று அங்கிருந்து நகர் மணிக்கூட்டுக் கோபுரத்தையடைந்து அங்கிருந்து மட்டு பொலிஸ் நிலைய வீதி சுற்றுவட்டத்தையடைந்து பின்னர் அங்கிருந்து கோட்டமுனை பாலம் ஊடாக காந்தி பூங்கா வரை சென்றது.இதன் பின்னர் அங்கு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட சுகாதார துறையினர் பிற்பகல் ஒரு மணிக்கு அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# இலங்கையில் கடந்த 11 மாதங்களில் 10713 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## 5 வயதுக்கு குறைந்தோர் 1632 பேர் என்கிறார் அமைச்சர் டலஸ்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஊடக நெறிமுறையொன்றை விரைவில் ஏற்படுத்துவோம். அது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது என ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது ஊடகங்கள் பின்பற்றவேண்டிய ஊடக நெறிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை இடம்பெற்ற போது இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற துரித இலக்கம் தற்போது 24மணி நேரமும் செயற்பட்டு வருகின்றது. அதனால் சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அந்த இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொது மக்களை கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை 1938 என்ற துரித இலக்கத்துக்கு 24மணி நேரமும் முறையிடலாம். சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பல்வேறு அடிப்படையில் அதிகரித்து வருவதை அறிந்துகொள்ள கிடைக்கின்றது. அதனை கட்டுப்படுத்த எமது சட்ட திட்டங்களை இறுக்கமாக்குவதுடன் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியம்.

அத்துடன் எமது நாட்டில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரைக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 713 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதில் 1632 முறைப்பாடுகள் 5வயதுக்கு குறைந்தவர்கள் தொடர்பானது. இந்த காலப்பகுதிக்குள் 6 முதல் 10வயது வரையான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2 625முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. இதில் 40வீதம் 5வயதுக்கு முறைவான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவே முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. இந்த கணக்கெடுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலாகும். இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்றே முறைப்பாடு செய்யப்படுகின்றது.

மேலும் சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் 60நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் 3நாடுகளே ஆசிய நாடுகளாக இருக்கின்றன. ஜப்பான், சிங்கப்பூர், மற்றும் தென் கொரியா என்பனவே அவை. . ஏனைய 5% நாடுகளும் மேற்கத்தேய நாடுகளாகும். உலகலாவிய ரீதியில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் நாடுகளில் ஆபிரிக்கா முதலிடத்தில் இருக்கின்றது . அதன் இரண்டாம் இடத்தில் ஆசிய நாடுகளே இருக்கின்றன.

அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருப்பது, கல்விக் கட்டமைப்பு, சட்டக் கட்டமைப்பு மற்றும் ஊடக பிரசார கட்டமைப்பின் பலவீனமாகும். இவற்றை சரிசெய்வது எமது கடமையாகும். அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்படவேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்றை விரைவில் ஏற்படுத்துவோம். அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

### பொதுஜன பெரமுனவின் ஆட்சியிலுள்ள கட்டான

# பிரதேச சபை பட்ஜெட் ஆளும் தரப்பாலேயே தோற்கடிப்பு

நீர்கொழும்பு நிருபர்

பொதுஜன பெரமுன வசமுள்ள கட்டான பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 8 மேலதிக வாக்குகளால் தோல்வியுற்றுள்ளது.

பொதுஜன பெரமுனவின் சில உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

கட்டான பிரதேச சபையின் அமர்வு தலைவர் நந்த விஜேரத்ன டி சில்வா தலைமையில் நடைபெற்றபோது 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்கெடுப்பின் போது ஆதரவாக 1% வாக்குகள் மாத்திரமே கிடைத்தன. பட்ஜெட்டிற்கு எதிராக 25 பேர் வாக்களித்தனர். 8 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் தோல்வியுற்றது.

வரவு செலவு திட்டத்திற்கு எதிராக பொதுஜன பெரமுனவின் 15 உறுப்பினர்களும் ஐ.தே.க.5 உறுப்பினர்கள், ஜே.வி.பி. 3 உறுப்பினர்கள்,சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருவர், சுயேட்சை அங்கத்தவர் ஒருவர் என 25 பேர் வாக்களித்தனர்.

பொதுஜன பெரமுனவின் 4, சிறிலங்கா சுதந்திரக் கட்சி 7, ஐ.தே.க. 5, சுயேட்சை 1 ஆக 17 பேர் ஆதரவாக வாக்களித்தனர். 8 மேலதிக வாக்குகளால் 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.

# பண்டிகைக் கால பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சாரதிகளை அடையாளம் காண விசேட நடவடிக்கை

க.பிரசன்னா

எதிர்வரும் பண்டிகைக் கால பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகன சாரதிகளை அடையாளம் காண்பதற்காக நாடு முழுவதும் விசேட நடவடிக்கையினை அமுல்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் குறிப்பாக மது போதையில் வாகனத்தை செலுத்தும் நபர்களை கைது செய்வதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகன சாரதிகள் மிகவும் அவதானமாகவும் போக்குவரத்து விதிமுறைகளை கடுமையாக பின்பற்றியும் வாகனங்களை செலுத்த வேண்டும்.

பண்டிகை காலப்பகுதியில் பொலிஸாரினால் அமுல்படுத்தப்படவுள்ள விசேட நடவடிக்கையானது, இரவு மற்றும் பகல் வேளைகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. மது போதையில் வாகனத்தை வேகமாக செலுத்தும் விதிமுறைகளை மோசமாக மீறும் சாரதிகள் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் மீது சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைகாலத்தை முன்னிட்டு மேல் மாகாணத்தில் விசேட பொலிஸ் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, மேல் மாகாணத்தில் விசேட கடமைகளுக்காக ஏற்கனவே பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போக்குவரத்தை கட்டுப்படுத்தவும், சுகாதார வழிகாட்டல்களை அமல்படுத்தவும், நகர்ப்புறங்களில் மோசடி செய்பவர்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தவும் இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் சாரதிகள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### நல்லூரில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

சமய முறைப்படி வேட்டி அணிந்து மேலாடை துறந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

சீனத் தூதுவரின் வருகையை முன்னிட்டு நல்லூர் ஆலயச் சூழல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்ததுடன் கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டிருந்தன

இதேவேளை நேற்று காலை 8 மணியளவில் அரியாலை கடலட்டை பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் தூதுவர் ஆராய்ந்திருந்தார்.

இதன் போது கடலட்டை பண்ணையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்றும் இடம்பெற்றது

அங்கு நின்ற பனை மரத்தினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டி இதுதான் பல்மேறா எனத் தெரிவித்த போது சீனத் தூதுவர் பனைமரம் தொடர்பில் வினவினார்.

இதில் ரொடி (கள்) கிடைக்கும். அந்த கோல் என தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவனானதா இது உடம்புக்கு கேடு விளைவிக்காது என விளங்கப் படுத்தியபோது தூதுவர் பலமாக சிரித்து அதனை ஆமோதித்தார்.

### வைத்தியர்...

முன்பக்கத் தொடர்ச்சி...

வைத்தியசாலையின் வைத்தியர் ஷாஃபி ஷிஹாப்தீனுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் கொடுப்பனவை வழங்கி பணியில் அமர்த்துமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர், தாபன சட்டவிதிகளின் பிரகாரம் அவரை மீண்டும் பணியில் அமர்த்துமாறும், அவர் கட்டாய விடுமுறையில் இருந்த காலப்பகுதிக்கான கொடுப்பனவை மீள செலுத்துமாறும் கோரியுள்ளார்.

கருத்தடை சத்திர சிகிச்சை விவகாரத்தால் பெரும் சர்ச்சைக்கு உள்ளான வைத்தியர் மொஹமட் ஷாஃபி ஷிஹாப்தீன், இந்தக் குற்றச்சாட்டுகள் காரணமாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டார்.எவ்வாறாயினும், இறுதி வழக்கு விசாரணையின்போது, வைத்தியர் ஷாஃபி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என்று குற்றப் புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவித்தனர். இதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையிலேயே வைத்தியர் ஷாஃபி ஷிஹாப்தீனுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் கொடுப்பனவை வழங்கி பணியில் அமர்த்துமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச். முனசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

### சிலிண்டரில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் புதன்கிழமைக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைமையகம், இலங்கை குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரியந்த குமாரவின் குடும்பத்தினர் மீது கொண்ட அனுதாபங்கள் எரிவாயு வெடிப்பினால் ஏற்பட்ட காயங்களினால் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு வழங்கப்படவில்லை. உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் போராட்டம் தீவிரப்படுத்தப்படும்.

இதேவேளை தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய எதிர்பார்ப்புகளுடன் பொது மக்கள் தற்போதைய அரசாங்கத்துக்கு வாக்களித்திருந்த நிலையில் உணவு தயாரிக்கும் நடவடிக்கையின் போது பலரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சிவில் சமூக ஆர்வலர் நாகந்தர தெரிவித்துள்ளார்.

அனைத்து இல்லத்தரசிகள் மற்றும் தாய்மார்களின் உயிர்கள் ஆபத்தில் உள்ளதால் வீதிக்கு இறங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மக்கள் அச்சத்துடன் வாழும் நிலையில் இப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

### காணி...

முன்பக்கத் தொடர்ச்சி...

பத்திரப் பிரதிகளை பெறமுடியும் தற்போதுள்ள கோவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களைக் குறைக்க இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதென திவானர் நாயகம் தெரிவித்துளார்பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திணைக்களத்தினூடாகஇணையவழியில் கோரிக்கைவிடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது

இதன்பிரகாரம் பொதுமக்கள் தங்கள்கைப் பேசிகள் அல்லது கணினிகளில் இருந்து சான்றிதழ்பிரதி களை கோருவதற்கு கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தலாம். மாஸ்டர் அல்லது விசா கார்டுகளைப் பயன்படுத்தி தொடர்புடைய பணம் செலுத்தலாம்.

கோரிக்கையை முன் வைப்பதற்கு முன், விண்ணப்பதாரர் தங்கள்கைப்பேசி இலக்கத்தை திணைக்களத்துடன் சரிபார்க்க வேண்டும். தொலைபேசி எண் சரிபார்க்கப்பட்ட பிறகு, விண்ணப்பதாரர் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப படிவத்தை பூர்த்தி செய்ய முடியும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (http://www.rgd.gov.lk/web/index.php?lang=en). இதேவேளை கோவிட் தொற்றுநோய் காரணமாக, பல பிரதேச செயலகங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த அலுவலகங்களில் இன்டர்நெட் வசதிகளை பராமரிப்பது தாமதமடைந்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது

### நாட்டில் 4 பேருக்கு....

முன்பக்கத் தொடர்ச்சி...

அதிகரித்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மரபணு பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட நடவடிக்கைகளின் அடிப்படையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எதிர்பார்த்தபடி, ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. எனவே கொவிட் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸான பைசர் தடுப்பூசியினை சகலரும் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் முதலாவது ஒமிக்ரோன் வைரஸ் தொற்றாளர் கடந்த நவம்பர் 3ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார்.

அவர் நைஜீரியாவில் இருந்து இலங்கை வந்தவரெனவும் எவ்விதமான கொவிட் தடுப்பூசியினையும் பெற்றுக்கொள்ளாதவரெனவும் அடையாளம் காணப்பட்டார். புதிய கொவிட் திரிபு அடையாளம் காணப்பட்டதன் பின்னர் போட்ஸ்வானா, எஸ்வடினி, லெசோதோ, நமீபியா, தென்னாப்பிரிக்கா மற்றும் சிம்பாப்வே ஆகிய ஆறு நாடுகளுக்கு பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த 12 ஆம் திகதி முதல் தடை நீக்கப்பட்டது.

இதேவேளை பிரித்தானியாவில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அந்நாட்டு பயணிகளுக்கு எவ்விதமான பயணக் கட்டுப்பாடுகளும் இலங்கையில் விதிக்கப்படவில்லை. ஒமிக்ரோன் வைரஸ் திரிபின் முதலாவது மரணம் பிரித்தானியாவிலேயே பதிவு செய்யப்பட்டிருந்தது

### புலிகள்...

முன்பக்கத் தொடர்ச்சி...

ஒழுங்குப்படுத்தல்கள் ஊடாக, உலகில் உள்ள பல்வேறு அமைப்புகள் விளம்பரங்களை மேற்கொள்வதற்கும், அமைப்பு சார்பாக பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக்கில் வருடத்துக்கு ஒரு முறை இந்த அமைப்புகள் தொடர்பான பட்டியலை புதுப்பிக்கப்படும் . இந்த நிலையில் , இலங்கையை தளமாகக் கொண்ட மூன்று அமைப்புகளுக்கு இவ்வாறு பிரசாரங்களை மேற்கொள்ள பேஸ்புக் தடை விதித்துள்ளது.

இதன்படி, இவ்வருடமும் பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவான பதிவுகளை மேற்கொள்ள அந்நிறுவனம் தடை விதித்துள்ளது. பேஸ்புக் தமது வகைப்படுத்தலின் கீழ், விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக குறிப்பிட்டு இவ்வாறு தடை விதித்துள்ளது. இதற்கிடையில், நாட்டில் உள்ள பொதுபல சேனா அமைப்பு மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பிலும் எந்தவொரு பதிவையும் இடுவது பேஸ்புக்கினால் தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே, 'சிங்ஹலே' என்ற அமைப்புக்கும் தொடர்ந்தும் தடை விதித்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு அமைப்புகளுக்கும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு மத்தியில் வெறுப்புப் பேச்சுகளை கொண்டு செல்லுதல் மற்றும் சமூகங்களுக்கு இடையில் கிலேசமூட்டும் கருத்துக்களை பகிர்தல் என்றதன் அடிப்படையில் பேஸ்புக் நிறுவனம் தடை விதித்துள்ளது.

### உள்ளூராட்சி...

முன்பக்கத் தொடர்ச்சி...

தேர்தலை ஒத்திவைப்பதே நல்லது என்று அரசாங்கத்திற்குள் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி தேர்தலை ஒரு வருடத்திற்கு ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது. இது தொடர்பான யோசனை அடங்கிய அமைச்சரவைப் பத்திரமொன்றை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளதாகவும், அதன்பின்னர் அமைச்சரவையில் அது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஒருவருடத்தினால் நீடிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### நாட்டையும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

தேசிய மக்கள் சக்தியினால் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மிகவும் குறுகிய காலத்தில் அரசாங்கம் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது. பொருளாதார நிலைமையே இதற்கு காரணமாக இருக்கின்றது. தற்போது துறைமுகத்தில் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 1500 வரையான கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதேபோன்று எமக்கு எதிர்வரும் கடன் தவணையை செலுத்த முடியாத நிலைமை ஏற்படும் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதன்படி அனைத்து துறைகளிலும் இந்த பாதிப்பு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் அனைவரும் இதனைப் பற்றி கதைக்கும் நிலைமையை ஏற்பட்டுள்ளது.ஊழல், மோசடிகள் விடயத்தில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், உர இறக்குமதி, வரிக்குறைப்பு உள்ளிட்ட விடயங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.இதனால் மக்கள் ஊழல், மோசடி, வீண் விரயமற்ற புதிய ஆட்சி நாட்டுக்கு அவசியம் என்பதனை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இன்னும் இந்த ஆட்சியாளர்களின் முடியாமை மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் மக்கள் அறிந்து இந்தப் பிரச்சினைகளில் இருந்து வெளியே வருவதற்கு எதிர்பார்க்கின்றனர். இந்த விடயத்தில் சம்பிரதாயமாக இருந்த அரசியல் கட்சிகளை நிராகரித்து புதிய மாற்றத்திற்காக ஒன்றிணைகின்றனர். பொருளாதார அபிவிருத்தி, ஊழல் மோசடி அற்ற சட்டம், ஒழுங்கை மதிக்கும் ஆட்சியையே மக்கள் விரும்புகின்றனர். அந்த புதிய பாதையை அமைக்கும் சக்தியாக தேசிய மக்கள் சக்தி இருக்க தயாராக இருக்கின்றது. கொள்கை ரீதியான மாற்றமாக பிரச்சினைகளுக்கு தீர்வாக தேசிய மக்கள் சக்தி இருக்கும். இதற்கான சவால்களை ஏற்கவும், வீழ்ந்துள்ள நாட்டையும், பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்ப நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

இதன்படி தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் மாநாட்டை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். ஜயவர்தனபுரவில் மொனாக் இம்பீரியல் மாநாட்டு மண்டபத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது. இதில் சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், விவசாய நிபுணர்கள், கிராமிய மக்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்றார்.

### வடக்கு- சீனா....

முன்பக்கத் தொடர்ச்சி...

தொடர்ந்தும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாண மக்களுக்கு உதவிகளை வழங்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் சமாசத்தில் மீனவர்களுக்கு வலைகள் மற்றும் உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே சீன தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நல்லுறவு

நிலவி வருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே சீன தூதரகமானது யாழ்ப்பாண மக்களுக்கு மீன்பிடி வலை மற்றும் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைக்கிறது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வை ஒரு ஆரம்ப நிகழ்வாகவே நாங்கள் கருதுகின்றோம். இன்று ஆரம்பமான இந்நிகழ்வானது சீனா மற்றும் வடக்கு மக்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் என நாங்கள் கருதுகின்றோம்.

சீன தூதரகமானது இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது சீனா நாடான இலங்கைக்கு பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ளது. அதேபோல வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கான தடுப்பூசியினை பெற்றுக்கொடுப்பதில் சீனா பெரும்பங்காற்றியுள்ளது

அதேபோல் நேற்று வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டத்திற்குமென ஐந்து நீர் சுத்திகரிக்கும் இயந்திரப் பொறிமுறையினையும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்துள்ளோம்.

அதேபோல்5மடிக்கணணிகள் மற்றும் ஒரு தொகுதி புத்தகத்தையும் பொது நூலகத்திற்கு வழங்கியுள்ளோம்.

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனாக் காலத்தில் இந்த சிறிய உதவி வழங்கப்படுவதை ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாங்கள் பார்க்கின்றோம். எதிர்காலத்தில் இந்த உதவித் திட்டங்கள் தொடரும் எனவும் சீன தூதுவர் குறிப்பிட்டார்.

# மஸ்கெலியா பிரதேச சபையில் நடக்கும் மோசடிகள் வன்முறைகளை தடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

பொகவந்தலாவ நிருபர்



மஸ்கெலியா பிரதேச சபையில் தொடர்ச்சியாக மோசடி மற்றும் வன்முறைகள் இடம்பெறுவதாக தெரிவித்து நேற்று வியாழக்கிழமை முற்பகல் வேலையில் மஸ்கெலியா பிரதேசசபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்பாட்டத்தினை மஸ்கெலியா பிரதேசசபையின் எதிர்தரப்பு அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர். மஸ்கெலியா பிரதேசசபையின் அனுமதியின்றி சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்படுவதாகவும் அதற்கு மஸ்கெலியா பிரதேசசபை தலைவர்துணை போவதாகவும் வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தினர்.

தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கு, வன்முறைகளை நிறுத்து, கட்டிடங்களில் கட்டப்படுவதில் இடம்பெறும்மோசடிகளை நிறுத்து போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மஸ்கெலியா பிரதேசசபையில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் ஆகியோர் விஷேட குழு அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# தமிழரசுக்கட்சிக்கு ஆதரவளித்த ஸ்ரீ.சு.க.வின் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினரை கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை

## சுரேன் ராகவன் எம்.பி. தெரிவிப்பு

தலை மன்னார் நிருபர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட்ட நானாட்டான் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான பெனடிக்ட் யாக்கோப்பிள்ளையை கட்சியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட தலைவருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவரிடம் வினவிய போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் நானாட்டான் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் செவ்வாய்க்கிழமை முன்வைக்கப்பட்டபோது போது கட்சியின் முடிவுக்கு மாறாக குறித்த உறுப்பினர் செயல்பட்டு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாக வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களித்துள்ளார். இந்த நிலையில் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் யாக்கோப்பிள்ளையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். இதே வேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் கோரிக்கைக்கு அமைவாகவே நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் போது இலங்கைதமிழரசுக்கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் பெனடிக்ட் ஜக்கோபிள்ளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் புதிய நீதிமன்றங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை

## ஐ. நா. அபிவிருத்தி திட்ட உதவி செயலரிடம் நீதி அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் புதிய நீதிமன்றங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட உதவி செயலாளர் கனி விக்னராஜா மற்றும் தூதுக் குழுவினர் நீதி அமைச்சர் அலி சப்ரியை நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது நீதித் துறையில் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் முன்னெடுப்புகள் குறித்து நீதி அமைச்சர் விளக்கமளித்துள்ளார். புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் புதிய நீதிமன்றங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிடுள்ளார்.



இலங்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட பிரதிநிதிகள் இதன் போது அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த சந்திப்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் சார்பில் நிரந்தர பிரதிநிதி ரொபட் ஜூகம், பிரதி நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மலின் ஹார்விங், கொள்கை நிபுணர் சந்திரிகா கருணாரத்ன, ,அமைச்சின் செயலாளர் மாயாதுன்ன இணைப்புச் செயலாளர் ஸமீர் ஸவாஹிர், ஆலோசகர் பயாத் பாக்கிர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்ததாக நீதி அமைச்சு விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'சிதைந்து போகும் தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தமிழ்த் தலைமைகளும்'

## நாளை யாழில் அரசியல் கருத்தாய்வு நிகழ்வு

தன்னிலை இழந்து தளர்வுற்று நோக்கு நிலையின்றி தள்ளாடும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்கால இருப்பு நிலையியல் தொடர்பாக அரசியலாளர்கள், கருத்தியலாளர்கள், சமூக ஆர்வலர்கள்பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 'சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தமிழ்த் தலைமைகளும்' எனும் தலைப்பில் நாளை சனிக்கிழமை கருத்தாய்வு நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.கலைத்தூது மண்டபத்தில் காலை 9.30இக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் முன்னிலை உரையை அருட்தந்தை ஜெயபாலன் அடிகளார் வழங்கவுள்ளார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆகியோரும், சிவாஜிலிங்கம், அருந்தவபாலன் ஆகியோரும் கருத்துரைக்கவுள்ளனர்.

மேலும், பூகோள அரசியலூக்குள் சிக்கித் தவிக்கின்றதா தமிழ்த் தேசியம் எனும் தலைப்பில் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கமும், வெளிவிவகார கொள்கையும் கட்சி முரண்பாடும் எனும் தலைப்பில் நிலாந்தனும், இனப்பிரச்சினைக்கான தீர்வும், தமிழ்க் கட்சிகளின் வகிபாகமும் எனும் தலைப்பில் ந.வித்தியாதரனும், தமிழ்த் தேசியத்தின் இருப்பைக் கட்டமைப்பதற்கான தலைமைத்துவமும் செல்நெறியும் எனும் தலைப்பில் செல்வினும் உரையாற்றவுள்ளனர்.

இக்கருத்துப்பகிர்வுறவாடல் நிகழ்வினை தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் நெறிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பொது மக்களுக்கான அறிவித்தல்



சுப்ரமணியம் வினோஜ் காந்த்
942153341V

2021 டிசம்பர் 7 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் Copreus Private Limited இல் மேற்படி பெயரைக் கொண்ட நபர் பணியில் இல்லை எனும் அறிவித்தலை நிறுவனம் பொது மக்களுக்கு இத்தால் வழங்குகின்றது. அதன் பிரகாரம், அவர் பின்வரும் நிறுவனங்கள் சார்பாக எந்தவித வியாபார கொடுக்கல் வாங்கல்கள் அல்லது இதர தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எவ்வித அதிகாரத்தையும் கொண்டிருக்கமாட்டார்:

1) Copreus (Pvt) Ltd
2) Premium Support (Pvt) Ltd
3) SecureCollect (Pvt) Ltd
4) Lead Capital Corporation (owner-operator of www.fing.com)
5) Gulf Brokers LTD (owner-operator of www.gulfbrokers.com)

சுப்ரமணியம் வினோஜ் காந்த்துடன் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்குமான பொறுப்பையும் அந்தந்த வாடிக்கையாளர்கள் ஏற்க வேண்டும் என்பதுடன், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அதற்கான பொறுப்பை ஏற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Copreus (Pvt) Ltd
Level 19, World Trade Center, Colombo 01
www.copreus.com

Amãna Bank

### அமானா வங்கி பீஎல்சீ (PB 3618 PQ)

(PB 3618 PQ) என்ற குறிப்பீட்டிலக்கத்தின் கீழ் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் [illegible])

2021.11.20 [illegible] 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க, [illegible] அமானா வங்கி பீஎல்சீ [illegible]

[illegible]

2013.12.21 [illegible] (02) [illegible] 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, [illegible] அமானா வங்கி பீஎல்சீ [illegible]

[illegible] அமானா வங்கி பீஎல்சீ [illegible] 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் [illegible]

1990, ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் [illegible] அமானா வங்கி பீஎல்சீ [illegible]

[illegible] 2013.12.21 [illegible] 2020.07.31 [illegible] 2020.07.31 [illegible] அமானா வங்கி பீஎல்சீ [illegible]

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
[illegible], தலைவர் - [illegible]

LITRO GAS

### முக்கிய அறிவித்தல்

அனைத்து லிற்ரோ கேஸ் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு ,தன் மூலம் நிறுவனம் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் அனைத்து லிற்ரோ கேஸ் வீட்டுப்பாவனை எரிவாயு சிலிண்டர்களை பயன்படுத்தாத/ முத்திரை அகற்றாத நீலம் மற்றும் கருப்பு முத்திரையுடன் கூடிய (12.5kg, 5kg மற்றும் 2.3kg) சிலிண்டர்களை திரும்பப்பெறுகிறது.

#### வாடிக்கையாளர்களுக்கு:-

- லிற்ரோ கேஸ் வாடிக்கையாளர்கள், நீலம் மற்றும் கருப்பு முத்திரையுடன் கூடிய பயன்படுத்தாத/ முத்திரை அகற்றாத (12.5kg, 5kg மற்றும் 2.3kg) வீட்டுப்பாவனை எரிவாயு சிலிண்டர்களை தங்களுக்கு அருகிலுள்ள லிற்ரோ கேஸ் விற்பனையாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
- விற்பனையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பயன்படுத்தாத/ முத்திரை அகற்றாத லிற்ரோ கேஸ் எரிவாயு சிலிண்டருக்கும் பதிலாக, அதே வகையைச் சேர்ந்த சிவப்பு முத்திரையுடன் கூடிய லிற்ரோ கேஸ் எரிவாயு சிலிண்டர் மாற்றப்படும்.
- வாடிக்கையாளர்கள் எரிவாயு சிலிண்டர்களைத் திருப்பித் தரும் நேரத்தில், விற்பனையாளரிடம் போதியளவு சிவப்பு முத்திரை கொண்ட எரிவாயு சிலிண்டர் கையிருப்பு ,ல்லை என்றால், விற்பனையாளருக்கு புதிய எரிவாயு சிலிண்டர் கிடைத்தவுடன் மாற்றித்தரப்படும்.

#### விற்பனையாளர்களுக்கு:-

- லிற்ரோ கேஸ் வாடிக்கையாளர், தங்களுடைய நீலம் அல்லது கருப்பு முத்திரையுடன் கூடிய பயன்படுத்தாத/ முத்திரை அகற்றாத 12.5kg, 5kg மற்றும் 2.3kg எடையுள்ள லிற்ரோ கேஸ் எரிவாயு சிலிண்டரைக் கொண்டு வரும்போது, விற்பனையாளர் அதை வாடிக்கையாளரிடம் ,ருந்து ஏற்றுக்கொண்டு புதிய லிற்ரோ கேஸ் சிவப்பு முத்திரை கொண்ட எரிவாயு சிலிண்டரை வழங்க வேண்டும்.
- வாடிக்கையாளர்கள் எரிவாயு சிலிண்டர்களைத் திருப்பித் தரும் நேரத்தில், விற்பனையாளரிடம் போதியளவு சிவப்பு முத்திரை கொண்ட எரிவாயு சிலிண்டர் கையிருப்பு ,ல்லை என்றால், விற்பனையாளருக்கு புதிய எரிவாயு சிலிண்டர் கிடைத்தவுடன் வாடிக்கையாளருக்கு வழங்க வேண்டும்.

#### விநியோகஸ்தர்களுக்கு:-

வாடிக்கையாளரிடம் மற்றும் விற்பனையாளரிடம் திரும்பப்பெற்ற அனைத்து வீட்டுப்பாவனை எரிவாயு சிலிண்டர்களையும், விநியோகஸ்தரிடம் ,ருக்கும் எரிவாயு சிலிண்டர்களையும் உடனடியாகச் சேகரித்து நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைக்குமாறு விநியோகஸ்தரிடம் கோட்டுகொள்கிறோம்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
daily@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
வெள்ளிக்கிழமை 17 டிசம்பர் 2021 Friday 17th December 2021

## நீரில் மூழ்கி மரணமடைவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு

இலங்கையில் நீரில் மூழ்கி உயிரிழக்கும் 1 முதல் 14 வயதுடைய சிறார்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. வருடாந்தம் 100க்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக இலங்கை உயிர்காப்பு அமைப்பின் தலைவர் அசங்க நாணயக்கார தெரிவித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை ஏனைய வயதினரிடையேயும் நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2021இல் சுமார் 900 பேர் உயிரிழந்துள்ளனர். விழிப்புணர்வு இல்லாததே இந்த மரணங்களுக்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக 2020 மற்றும் 2021 இல் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும், நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. கிணறுகளில் விழுந்து இறக்கும் விபத்துச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன .

இலங்கையில் 2016 முதல் 2018 வரை வருடாந்தம் சராசரியாக 755 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், 2005 முதல் 2007 வரையிலான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 20 வீதத்தால் இத்தொகை குறைவடைந்துள்ளது .ஆயினும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இது அதிகரித்துள்ளது. பெண்களை விட ஆண்களே அதிகளவில் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். இதற்கிடையில், இந்த மரணங்களுக்கு விழிப்புணர்வின்மை, கவனக்குறைவு, மது அருந்துதல் , பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தாமல் நீச்சலில் ஈடுபடுதல் போன்றவை முக்கிய காரணங்களாகுமென்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் 500,000 பேர் நீரில் மூழ்கி இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 13 இலட்சம் மக்கள் நீரில் மூழ்கும் அனுபவங்களின் விளைவாக காயங்களுக்கு உள்ளாகிறார்கள்.அதேசமயம் 25%-50% இளம் பருவத்தினர் மற்றும் வயது வந்தோர் மத்தியிலான மரணங்கள் பொழுதுபோக்கு நடவடிக்கைகளின்போது நீரில் மூழ்கும் சம்பவங்களுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது .

நீரில் மூழ்கும் சம்பவங்களில் பெரும்பாலானவை பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் போது சம்பவித்தவையாகும். கடல்,குளம், ஆறுகளுக்கு விடுமுறைக்குச் செல்பவர்கள், அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளை முற்றிலும் புறக்கணிப்பதால் மரணமடைய நேரிடுகிறது. இலங்கையில் நீரில் மூழ்கும் சம்பவங்களுக்கு முக்கிய இடமாக ஏரிகளும் கடலும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.உலக சுகாதார அமைப்பின் 2014 ஆய்வின் பிரகாரம் 2012-2014 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நீரில் மூழ்கும் விகிதம் 100,000 க்கு 4.2 மரணங்களாகும். 61 நாடுகளில் இலங்கை 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட 35 நாடுகளுடன் ஒப்பிடும் போது 10 ஆவது இடத்தில் உள்ளது.நீரில் மூழ்கும் சம்பவங்களில் பெரும்பாலானவை மாத்தறை, மிரிஸ்ஸ, காலி, ஹிக்கடுவ, பேருவளை, களுத்துறை, பாணந்துறை, தெஹிவளை, கல்கிசை, வெள்ளவத்தை, காலி முகத்திடல், நீர்கொழும்பு மற்றும் நிலாவெளி போன்ற இடங்களில் சம்பவித்துள்ளன. நீரில் மூழ்குவதிலிருந்து சமாளிப்பதற்கு நீச்சல் கற்றுக்கொள்ளாமை, உயிர்காக்கும் சேவைகளுடன் அடையாளம் காணப்பட்ட பாதுகாப்பான நீச்சல் வலயங்கள் இல்லாதமையும் காரணமாகிவிடுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மேல் மாகாணத்தில் கிட்டத்தட்ட 300 பேரும் வடமாகாணத்தில் 52 பேரும் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.இந்த மரணங்களில் பெரும்பாலானவை தடுக்கக்கூடியவை. எனினும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தடுப்பு உபாயங்கள் குறைவாகவே உள்ளன. திறமையான நீச்சல் வீரர்கள் கூட சில சந்தர்ப்பங்களில் நீரில் மூழ்கலாம்.அதனால் சகல வேளைகளிலும் கண்காணிப்பு முக்கியம். நீச்சல் குளங்கள் மற்றும் ஏனைய திறந்தவெளி நீர்நிலைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அவர்களை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். கடல் கொந்தளிப்பு, திடீர் நீர்மட்ட உயர்வு, வெள்ளம் மற்றும் ஆழம் தெரியாத நீர் ஆதாரங்கள் போன்ற சுற்றுச்சூழல் காரணிகள் நீரில் மூழ்கி மரணமடைவதற்கான முக்கிய காரணங்கள் .அத்துடன், மது அருந்திவிட்டு நீந்தும் போதும் மூழ்கி மரணமடையவும் நேரிடுகிறது

தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட நீச்சல் பாடசாலைகள், நீச்சல் பயிற்றுவிப்போர், நீச்சல் கற்றல் திட்ட வழிகாட்டுதல்களை உருவாக்குதல், நீரில் மூழ்கி சம்பவிக்கும் மரணங்களை குறைக்கும். நீர்நிலைகளைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் குறித்து சிறிது விழிப்புடன் இருந்தால் மட்டுமே, துயரமான சம்பவங்களைத் தடுக்க முடியும். இல்லையெனில், விலைமதிப்பற்ற உயிர்கள் பூமியில் இருந்து வீணாக அழிந்துவிடும்.உண்மையில், இந்த அவலங்களுக்கு அடிப்படைக் காரணம் அலட்சியம். எனவே, இந்த மாதிரியான அசம்பாவிதங்கள் நீண்டகாலத்திற்கு இடம்பெறாமல் இருக்க, இந்தப் பிரச்சினை குறித்து நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பகுதியில் சிறார்கள் உட்பட 6 பேர் பலியான கோரமான துன்பியல் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு விழிப்புணர்வும் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளும் அவசியம்.

# அரசியலமைப்பு கோட்பாடுகள், அரசு, சட்டவாக்க சபையின் தன்மைகள் தொடர்பான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் முன்மொழிவுகள்



கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன

புதிய அரசியலமைப்புக்கான தனது முன்மொழிவுகளை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்ட ரீதியான வடிவத்தில் வெளியிட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழு ஒருவருடத்திற்கும் மேலாக புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. குழு அறிக்கை வெளியிடப்படுமா என்பது தெரியவில்லை. வரைபானது முழுமையாக அறிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதா அல்லது அரசாங்கத்தின் முன்மொழிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது.

இதற்கிடையில், சமூக நீதிக்கான தேசிய இயக்கம் (என்.எம்.எஸ்.ஜே.) அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த தனது முன்மொழிவுகளை வெளியிட்டிருக்கிறது. சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மறைந்த வண. மாதுலுவாவே சோபித தேரரால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் தாபக கால இருப்பில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவாதத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பிரசாரத்தில் வண.சோபித தேரர் முன்னணியில் இருந்தார். 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காலமானார். அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தச் சட்டம் தாம் எதிர்பார்த்த அளவிற்கு அமையவில்லை என மறைந்த தேரர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தார்.

ஜனநாயக ஆட்சி தொடர்பான தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களில் என்.எம்.எஸ்.ஜே.இன் முன்மொழிவுகள் ஏறக்குறைய ஒரு வருடப் பணியின் உச்சம். அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து நாடளாவிய ரீதியில் அனைவருக்கும் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மாறு சீரமைப்புக்கான தங்கள் திட்டங்களை முன்வைக்க நிபுணர்கள் அழைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து நீண்ட கேள்வி பதில் அமர்வுகள் இடம்பெற்றன. என்.எம்.எஸ்.ஜே. உறுப்பினர்களிடையே வரைவு முன்மொழிவுகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது. அந்த அமைப்பு இப்போது பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் உள்ளது. இக்கட்டுரை எழுத்தாளர் கிட்டத்தட்ட தொடக்கத்திலிருந்தே என்.எம்.எஸ்.ஜே. உடன் தொடர்புடையவர்.

**அரசியலமைப்பு விதிகள், அரசின் தன்மை, இறையாண்மை மற்றும் பிரிவினைக்கு எதிரான பாதுகாப்புகள்**

ஒரு புதிய அரசியலமைப்பு சில அடிப்படை அரசியலமைப்பு கோட்பாடுகளை கொண்டிருக்க வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. நிறவெறிக்குப் பின்னரான தென்னாபிரிக்க அரசியலமைப்பைத் தொடர்ந்து, அரசியலமைப்பு பிரச்சினைகளை தீர்க்கும் போது அல்லது அரசியலமைப்பை விளக்கும்போது கருத்தில் கொள்ளப்படும் அடிப்படைக் கொள்கைகளை பல புதிய அரசியலமைப்புகள் உள்ளடக்கியுள்ளன. சமூக நீதிக்கான தேசிய இயக்கம் பின்வருவனவற்றை முன்மொழிந்துள்ளது: மனித கௌரவம், சமூக நீதி, சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் முன்னேற்றம், இனவாதமற்ற மற்றும் பாலின சமத்துவம், அரசியலமைப்பின் மேலாதிக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி, வழக்கமான தேர்தல்கள் மற்றும் ஜனநாயக அரசாங்கத்தின் பல கட்சி அமைப்பு, பொறுப்புக்கூறல், பொறுப்புணர்வு , வெளிப்படைத்தன்மை ஆகியவற்றிற்கான உத்தரவாதம்.

1972 இல் இலங்கை அரசை 'ஒற்றையாட்சி' என வகைப்படுத்தியமையும் 1978 இல் அது நிலைநிறுத்தப்பட்டமையும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுகளை முயற்சிகளைத் தடை செய்துள்ளது. அரசியலமைப்பு கோட்பாட்டில், ஒரு ஒற்றையாட்சி அரசு என்பது மத்திய அரசாங்கம் உச்சமாக இருக்கும் ஒன்றாகும். மேலும் நிர்வாகப் பிரிவுகள் மத்திய அரசு பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. சுருக்கச் சொன்னால், அரச அதிகாரத்திற்கு ஒரே ஒரு இறுதி ஆதாரம் மட்டுமே உள்ளது. இருப்பினும் இலங்கையர் பலருக்கு 'ஒற்றை' என்பது 'ஒரே தன்மை' அல்லது 'ஒரு நாடு' என்பதாகும். 'ஒற்றை' என்பதன் சிங்களச் சொல் 'ஏகீய', 'ஏகா' என்பது 'ஒன்று'. இவ்வாறு, அரசின் 'ஏகீய' தன்மையை மாற்றுவது நாட்டை 'பிளவுபடுத்துவதாக' சிலரால் பார்க்கப்படுகிறது.

அரசியலமைப்பின் ஆங்கிலப் பதிப்பில் இலங்கை அரசை 'ஒற்றை' என்று விபரிப்பது விரும்பத்தகாதது என்று அதிகாரப் பகிர்வின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.மத்திய அரசுக்கும் மாகாணத்திற்கும் இடையில் குறிப்பிட்ட விவகாரம் மேலெழும்போது மத்திய அரசுக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறதென்று இலங்கையில் குறிப்பிட்ட தொரு 'ஒற்றையாட்சி மனப்பான்மை' இருந்து வருவது என்பது விரும்பத்தகாத காரணமாகும் மற்றும் ஒற்றையாட்சி தொடர்பான பிரபலமான அர்த்தத்தில், அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் மத்திய அரசால் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் திரும்பப்பெறப்படலாம் என்று அவர்கள் வாதிடுகின்றனர். சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை கூட அதிகாரப்பகிர்வை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வுகள் உள்ளன. 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொற்றொடரை பயன்படுத்துவதற்கு அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.


கடந்த பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழு மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து ஒரு வழிமுறையைப் பரிந்துரைத்தது. அரசியலமைப்பு பேரவையை அமைப்பதற்கான தீர்மானத்தின் மீது ஜனாதிபதி பேசுகையில், தெற்கில் உள்ள மக்கள் சமஷ்டி என்ற சொல்லுக்கு அஞ்சும் அதே வேளையில், வடக்கில் உள்ள மக்கள் ஒற்றையாட்சி என்ற சொல்லுக்கு அஞ்சுவதாகக் குறிப்பிட்டார். மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் அல்ல. 'யூனிட்டரி ஸ்டேட்' என்ற ஆங்கிலச் சொல்லின் பாரம்பரிய வரையறை மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.ஐக்கிய ராஜ்ஜியத்தில் இப்போது வட அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஒன்றியத்திலிருந்து விலகிச் செல்வது சாத்தியமாகும். எனவே, 'யூனிட்டரி ஸ்டேட்' என்ற ஆங்கிலச் சொல் இலங்கைக்கு ஏற்புடையதாக இருக்காது. 'ஏக்கிய ராஜ்ய' என்ற சிங்கள வார்த்தையானது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டை சிறப்பாக விவரிக்கிறது.

வழிநடத்தல் குழுவால் முன்மொழியப்பட்ட 'ஏகிய ராஜ்ய' என்பதற்கான தமிழ் வாக்கியமான 'ஒருமித்த நாடு' சர்ச்சையைக் கிளப்பியது. 'ஒருமித்த நாடு' என்பது சாராம்சத்தில் 'ஐக்கிய நாடு' என்று வாதிட்ட ஈ.பி.டி.பி. 1978 அரசியலமைப்பின் தமிழ் பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள 'ஒற்றையாட்சி' என்ற சொற்றொடரைப் பயன்படுத்த பரிந்துரைத்தது. 'ஒற்றையாட்சி' என்றால் 'ஒரே அரசாங்கம்' என்று பொருள்படும் என்றும் 'ஒரே அரசு' அல்ல என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியது.

சிங்களம் மற்றும் ஆங்கில பதிப்புகளில் 'ஏக்கிய ராஜ்ய' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழில் சரியான சொல் தமிழ் பதிப்பில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது.

தேசிய இயக்கத்தின் முன்மொழிவுகளின்படி, இலங்கை ஒரு ஏக்கிய ராஜ்யமாக இருக்கும், இது மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களை உள்ளடக்கியது. இது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்தும். ஒரு ஏக்கிய ராஜ்யம் என்பது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத ஒரு அரசாக வரையறுக்கப்படுகிறது. இதில் அரசியலமைப்பை திருத்துவதற்கு அல்லது அரசியலமைப்பை இரத்துச் செய்வதற்கும் மாற்றுவதற்கும் அதிகாரம் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளபடி தேசிய சட்டமன்றத்திற்கும் இலங்கை மக்களுக்கும் இருக்கும். இறையாண்மை என்பது மக்களிடம் உள்ளது என்பதுடன் பிரிக்க முடியாததும் அரசாங்க அதிகாரங்கள், அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியது. மக்களின் சட்டவாக்க நிறைவேற்று அதிகார, நீதித்துறை அதிகாரங்கள் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளபடி செயற்படுத்தப்படும்.

மாகாண சபையொன்று தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரிவினையை நோக்கிச் செல்லக்கூடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். இத்தகைய அச்சங்களைத் தணிக்க, நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டால், தலையிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. அதன்படி, ஒரு மாகாண நிர்வாகம் ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது கிளர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறும் சூழ்நிலை ஏற்பட்டால், அது குடியரசின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு தெளிவான விதத்தில் ஆபத்தை உருவாக்குகின்றது. இந்நிலையில் மாகாண நிர்வாகத்தின் அனைத்து அல்லது ஏதேனும் செயற்பாடுகள் மற்றும் தேவையான இடங்களில் மாகாண சபையை கலைக்க வேண்டும். அத்தகைய அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான காரணங்களை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும், அத்தகைய தலையீட்டை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும் மற்றும் தலையீடு நீதித்துறையின் மீள் ஆய்வுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.



**1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான பிரசாரத்தில் வண.சோபித தேரர் முன்னணியில் இருந்தார். 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் காலமானார். அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தச் சட்டம் தாம் எதிர்பார்த்த அளவிற்கு அமையவில்லை என மறைந்த தேரர் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருந்தார்**

**சட்டவாக்கம்**

பாராளுமன்றம் மற்றும் இரண்டாவது அவை ஆகியவற்றைக் கொண்ட இருசபை சட்டவாக்கத்தை சமூக நீதிக்கான தேசிய இயக்கம் முன்மொழிந்துள்ளது. பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும்.

பாராளுமன்றம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றினால் அல்லது வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அல்லது அரசாங்கக் கொள்கை அறிக்கை தோற்கடிக்கப்பட்டால் மற்றும் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கம் பதினான்கு நாட்களுக்குள் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெறவில்லை என்றால் ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்படும். எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியின் தலைவரின் இணக்கப்பாட்டுடன் பிரதமரின் பெயரில் ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால், பாராளுமன்றம் கலைக்கப்படும். மேற்கூறிய சூழ்நிலைகளைத் தவிர ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டார்.

தற்போது, யாருடைய பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அந்தக் கட்சி அல்லது குழுவின் உறுப்புரிமையை இழக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அதன் விளைவாக அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிறார். ஆனால் அத்தகைய உறுப்பினர் பதவி நீக்கத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் சவால் விடலாம். எவ்வாறாயினும், நடைமுறையில், அத்தகைய உறுப்பினர்கள் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கைகளையும் தடுக்கும் வகையில் மேலாட்ட நீதிமன்றத்திலிருந்து தடை உத்தரவுகளைப் பெறுகின்றனர் மற்றும் அதன் மூலம் கட்சித் தலைமை எதிர்ப்பு விதியின் நோக்கத்தை நிராகரிக்கின்றனர். இத்தகு பத்தொன்பதாம் திருத்தம் மூலம் தீர்வு காணப்பட்டது. ஆனாலும்,எதிர்க்கட்சியை ஆதரிக்காததால், பாராளுமன்றத்தில் குழுநிலையில் முன்மொழியப்பட்ட ஏற்பாடுகள் கைவிடப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் எடுக்கப்படும் அல்லது எடுக்க உத்தேசிக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான எந்தவொரு விடயத்தையும் விசாரிக்கவும் தீர்மானிக்கவும் உயர் நீதிமன்றத்திற்கு பிரத்தியேக அதிகார வரம்பு இருக்க வேண்டும் என்பதே சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் முன்மொழிவு. அத்தகைய நடவடிக்கை அல்லது முன்மொழியப்பட்ட செயலைத் தடுக்கும், தடை செய்யும் அல்லது தடை செய்யும் ரிட், தடை உத்தரவு அல்லது ஏனைய நிவாரணம் வழங்க வேறு எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை.

அதிகாரப் பகிர்வுக்கான கருவியாக பல நாடுகளில் சட்டவாக்கத்தின் இரண்டாவது அவை பயன்படுத்தப்பட்டு வருவதாக அமைப்பு சுட்டிக்காட்டுகிறது. அதிகாரப்பகிர்வு உள்ள ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய அவை உள்ளது. மாகாணங்களில் இருந்து பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டாவது அவை தேசிய சட்டமன்றத்தில் அவர்களுக்கும் ஒரு தனித்துவமான வகிபாகம் உள்ளது என்ற வலுவான உணர்வை மாகாணங்களில் ஏற்படுத்தும். இது கீழ் சபையின் பிரதிநிதித்துவத்தின் சாத்தியமான ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கான ஒரு பொறிமுறையாக செயற்படுவதோடு, மாகாணங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அவசர சட்டங்கள் மற்றும் சட்டங்களுக்கு எதிராக உள்ளமைக்கப்பட்ட பொறிமுறையாகவும் செயற்படும்.

இரண்டாவது அவையானது ஐம்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு ஒற்றை மாற்றத்தக்க வாக்கின் அடிப்படையில் ஐந்து உறுப்பினர்களை நியமிக்கும், இது செனட்டர்களைத் தேர்ந்தெடுக்க சுதந்திர அரசியலமைப்பின் கீழ் பயன்படுத்தப்படும் முறையாகும் . யார் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதில், இரண்டு விருப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விருப்பம் 1: உறுப்பினர்கள் பொது அல்லது தொழில் வாழ்வில் தங்களை வேறுபடுத்திக் கொண்ட உயர்ந்த மற்றும் நேர்மையான நபர்களாக இருக்க வேண்டும். விருப்பம் 2: பரிந்துரைக்கப்படும் உறுப்பினர்கள் மாகாண அமைச்சர்கள் உட்பட மாகாண சபைகளின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இரண்டாவது அவைக்கு சாதாரண சட்டத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் இருக்காது. பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து சட்டமூலங்களும் இரண்டாம் வாசிப்புக்கு முன்னர் அதன் கருத்துக்களைப் பெறுவதற்கு இரண்டாவது சபைக்கு அனுப்பப்படும். எவ்வாறாயினும், மாகாண சபைப் பட்டியலில் உள்ள ஒரு விடயம் அல்லது விடயத்தில் தேசிய கொள்கை அல்லது நுட்பங்களை உருவாக்குவதற்கான சட்டமூலம் இரண்டாவது சபையாலும் நிறைவேற்றப்பட வேண்டும். இரண்டாவது சபையானது அரசியலமைப்பு அல்லது சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் மேற்பார்வை மற்றும் பிற செயல்பாடுகளையும் மேற்கொள்ளும்.விசேட (2/3) பெரும்பான்மையுடன் பாராளுமன்றம் மற்றும் இரண்டாவது அவை இரண்டாலும் நிறைவேற்றப்பட்டாலன்றி எந்த அரசியலமைப்புத் திருத்தமும் சட்டமாக இயற்றப்படாது.

கொழும்பு டெலிகிராப்



# கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குவதால் யாருக்கு இலாபம்?

'உலகின் பல நாடுகளில் கஞ்சா தடை செய்யப்பட்டுள்ளதால் புகையிலை நிறுவனத்தால் கஞ்சா வியாபாரத்தை தொடர முடியவில்லை.எனவே சர்வதேச அளவில் கஞ்சா வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கும் தந்திரமான முயற்சி நடந்து வருகிறது.கஞ்சாவை எமது நாட்டை போன்ற வளரும் நாடுகளில் பயிரிட்டு அந்நியச் செலாவணி ஈட்டலாம் என்று கஞ்சாவை சட்டப்பூர்வமாக்க முயல்வது அதன் முக்கிய யுக்திகளில் ஒன்றாகும்'.

கடந்த வருடங்களில் உலகில் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குவது பற்றி அதிகம் பேசப்பட்டு வருகிறது.ஆனால் அதற்கு உந்துசக்தியாக இருப்பது புகையிலை தொழில் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. கனேடிய கஞ்சா நிறுவனத்தில் பங்குகளை வாங்க பிரித்தானியா அமெரிக்கா புகையிலை நிறுவனம் 126 மில்லியன் முதலீடு செய்துள்ளது. மேலும் உலகின் முன்னணி புகையிலை நிறுவனங்களில் ஒன்றான எல்ட்றியா நிறுவனம் கஞ்சா வணிகத்தைத் தொடங்க டொலர் மில்லியன்கள் 1.8 பில்லியன் முதலீடு செய்துள்ளது.



புகையிலை நிறுவனங்களின் இரகசிய அறிக்கைகளின்படி குறைந்து வரும் சிகரெட் சந்தைக்கு கஞ்சா (மர்ஜுவானா) ஒரு சாத்தியமான மாற்று என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். கஞ்சா பயிரிடுவதற்கு பெரிய நிலப்பரப்பு தங்களிடம் இருப்பதாகவும் அதை பொதியிடுவதற்கு தேவையான இயந்திரங்கள் இருப்பதாகவும் உலகம் முழுவதும் விநியோகிக்கும் திறன் இருப்பதாகவும் புகையிலை தொழித்துறையினர் கூறுகிறார்கள்.

உலகின் பல நாடுகளில் கஞ்சா தடை செய்யப்பட்டுள்ளதால் புகையிலை நிறுவனத்தால் கஞ்சா வியாபாரத்தை தொடர முடியவில்லை.எனவே சர்வதேச அளவில் கஞ்சா வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கும் தந்திரமான முயற்சி நடந்து வருகிறது.

கஞ்சாவை எமது நாட்டை போன்ற வளரும் நாடுகளில் பயிரிட்டு அந்நியச் செலாவணி ஈட்டலாம் என்று கஞ்சாவை சட்டப்பூர்வமாக்க முயல்வது அதன் முக்கிய யுக்திகளில் ஒன்றாகும்.எமது நாட்டைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்வது இலாபகரமானதா?

உலகில் கஞ்சா வியாபாரத்தில் இறங்கிய பல நிறுவனங்கள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளன. உலகின் மிகப் பெரிய கஞ்சா வியாபாரிகள் கடந்த ஆண்டுகளில் பல பில்லியன் டொலர்கள் நஷ்டம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு அவர்களின் வணிகங்களின் மதிப்பு 10 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக சரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக கஞ்சா (சணல்) எண்ணெய் விலை 2019 முதல் 75 வீதத்திற்கும் அதிகமாக குறைந்துள்ளது. கஞ்சாவிற்கான கேள்வி குறைவாக இருப்பினும் உற்பத்தி அதிகமாக இருப்பதால், உலகில் கஞ்சா எண்ணெய் பொருட்களின் விலை கடுமையாக சரிந்தது.அத்துடன் இன்று இலங்கையில் புகையிலை செய்கையை பிரித்தானியா அமெரிக்கா புகையிலை நிறுவனம் கையகப்படுத்தியது போன்று இந்த கஞ்சா செய்கையை நாட்டில் நிறுவி அதன் உரிமையை கஞ்சா நிறுவனங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது (தற்போதும் உலகளாவிய ரீதியில் கஞ்சா பயிர்ச் செய்கையை புகையிலை நிறுவனம் விலைக்கு வாங்கி வருகின்றன).

**பாதுகாப்புப் படையினரின் தலைமீட்டில் கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்வது எந்தளவு நடைமுறைக்கு சாத்தியமானது?**

பாதுகாப்புப் படையினரின் தலைமீட்டால் பொதுமக்கள் பாரபட்சமின்றி கஞ்சாவை வளர்த்து ஏற்றுமதி செய்யலாம் என்று கஞ்சா ஊக்குவிப்பாளர்கள் வாதிடுகின்றனர். இங்குள்ள நடைமுறைச் சூழல் என்னவென்றால் கஞ்சா ஏற்கனவே வளர்க்கப்பட்டு பாதுகாப்பில் உற்பத்தி செய்யப்படுகின்ற நாடுகளில் சட்டவிரோத கஞ்சா வியாபாரம் அதிகமாகி வருகின்றது. உலக வரலாற்றில் சிகரெட்டுகள் இலவசமாக அல்லது சலுகை விலையில் சிகரெட்டை விளம்பரப்படுத்த பாதுகாப்புப் படையினரால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன.

சட்டப்பூர்வ தயாரிப்புகளுடன் சட்டவிரோத வணிகங்கள் தோன்றுவது இயல்பானது. இலங்கையிலும் மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான சட்டவிரோத சந்தைகளை நாம் அனுபவ ரீதியாக காண்கின்றோம். எனவே கஞ்சாவை பாதுகாப்பாக வளர்க்கலாம் மற்றும் ஏற்றுமதி செய்யலாம் என்ற வாதங்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றது.

**கஞ்சாவை ஔடதமாக பயன்படுத்துவது தொடர்பான உண்மைத்தன்மை**

தற்போது மேற்கத்திய மருத்துவத்தில் கஞ்சா இரண்டு மருந்து வகைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுவதுடன், ஒரு வகையை இங்கிலாந்தில் உள்ள NIF 2019 இன் ஒப்புதல் பட்டியலில் இருந்து நீக்கியது. கஞ்சா சுதேச மருத்துவத்தில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நீண்ட செயல்முறைக்குப் பிறகு மட்டுமே சுதேச மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் சுதேச மருத்துவ முறையில் கஞ்சா புகைப்பது, கஞ்சா புகையை உட்கொள்வது எந்தவகையிலும் அங்கீகரிக்கப்படவில்லை. மற்றும் சுதேச மருத்துவ முறையில் இது போன்று எந்த முறைமையும் காணப்படவில்லை. இது பல நோய்களை ஏற்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா சுதேச மருத்துவத்தில் அதன் நச்சுத்தன்மையை நீக்குவதற்கு பல நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக இது தாவர எண்ணெயில் வறுக்கவும் கொதிக்கும் நீரில் கொதிக்கவும் செய்து நச்சுத்தன்மை நீக்கப்படுகிறது.

**கஞ்சா உபயோகத்தின் உண்மை நிலை**

கஞ்சா பயன்பாட்டினால் மனநோய்கள் தற்கொலை மற்றும் தன்னைத்தானே காயப்படுத்துதல் ஆகியவை பொதுவாகஏற்படும் பிரச்சினைகளாகும். கஞ்சா மூளையை எதிர்மறையாக பாதிக்கிறது என்றும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. அனைத்து அறிவியல் கோட்பாடுகளாலும் அடிமையாக்கும் தன்மையைக் கொண்டது.

கஞ்சா இளம் பருவத்தினருக்கு மாற்ற முடியாத பாதிப்புக்களை ஏற்படுத்தும். மேலும், 18 வயதுக்கு முன்பே கஞ்சாவை பயன்படுத்தத் தொடங்கிய இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகும் விகிதம் அதிகரித்து வருகிறது. கஞ்சாவை பயன்படுத்திவிட்டு வாகனம் செலுத்துவது விபத்துகளுக்கு முக்கிய காரணம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**ஏற்கனவே சட்டங்கள் தளர்த்தப்பட்ட நாடுகளில் தற்போதைய நிலை**

193க்கும் மேற்பட்ட ஐக்கிய நாட்டுச் சபையின் உறுப்புரிமையை பெற்ற நாடுகளில் ஐந்து நாடுகளில் மாத்திரமே (உருகுவே, மெக்சிகோ, ஜோர்ஜியா,தென்னாபிரிக்கா மற்றும் கனடா) கஞ்சா தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளது. சில மாநிலங்கள் அல்லது மாவட்டங்களில் மாத்திரமே கஞ்சா தொடர்பான சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய சட்டப்பூர்வமாக்கல் அரசியல் தீர்மானங்களிலே மேற்கொள்ளப்படுகிறது. மாறாக விஞ்ஞான ரீதியான முடிவுகள் அல்ல. கஞ்சா சட்டப்பூர்வமாக்கப்பட்ட நாடுகளில் தற்போதைய சமூக தாக்கம் மிகப்பெரியது.

குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் கஞ்சா பாவனை அதிகரித்து வருவதாகவும் கஞ்சா பாவனையால் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியை இடைநிறுத்துவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பதின்ம வயதினரின் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு கஞ்சா காரணமாக இருப்பதும் தெரியவந்துள்ளது.கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கியுள்ள நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் கஞ்சா பயன்பாடு அந்நாடுகளில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த ஆய்வுகள் கஞ்சா பாவனையானது நாட்டின் பணியாளர்களை பலவீனப்படுத்தியுள்ளது என்பதையும் காட்டுகிறது.

இந்தப் பின்னணியில் மதகுருமார்கள், அரசியல்வாதிகள், தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடகங்கள் இணைந்து இலங்கையில் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கும் சாதுரியமான முயற்சிகளை தோற்கடிக்க முயற்சிக்க வேண்டும். கஞ்சாவை பொருளாதார ஏற்றுமதி பயிரெனக் கூறி நம் நாட்டைச் சிக்கவைக்கும் பன்னாட்டு புகையிலை நிறுவனங்களின் இந்த முயற்சியை நாம் முறியடிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளின் பாடசாலைகளுக்கு எதிரே உள்ள கடையில் சிகரெட் விற்பதுபோல் கஞ்சா விற்கும் முயற்சியின் முதல் படியே இந்த நடவடிக்கை.

**மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்**

# ஒரு தேர்தலை நடத்தக்கூடிய அரசியல் பொருளாதார பலம் அரசிடம் இல்லை

## கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு நிருபர்

ஒரு தேர்தலை நடத்தக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தற்போது நான்கு வருடங்களுக்கு மேலாகின்றது. வடக்கு மாகாண சபையும் கலைக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது. அதேபோன்று அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கின்றது.

கடந்த வருடம் இந்த நாட்டைவிட படுமோசமாக இருந்த பங்களாதேஷிடம் இலங்கை கடன் வாங்கியிருக்கின்றது. இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலையோ, இன்னுமொரு தேர்தலையோ வைக்கக்கூடிய நிலைமை இந்த அரசிடம் இல்லை.

வருகின்ற வருடம் மார்ச் மாதத்துடன் உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படலாம். சிலவேளைகளில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் உள்ளூராட்சி சட்டத்தின் படி ஒரு வருடம் நீடிக்கக்கூடிய நிலைமையும் ஏற்படலாம் அல்லது உள்ளூராட்சி மன்றங்களையும் கலைத்து விட்டு உறுப்பினர்களுக்கான நிதியையும் மீதப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஆணையாளர், செயலாளர்களுக்குக் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைக் கொண்டு வரலாம்.

மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். இந்தியா மூலமாக மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இலங்கைக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். மாகாண சபைகளுக்கு உரிய முழுமையான அதிகாரங்களைக் கொடுத்து அந்தத் தேர்தலை வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளினையும் இந்தியாவிற்கு விடுத்திருக்கின்றோம்.எனவே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் படி 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தனவோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் உள்வாங்கி அதிகாரங்களைப் பரவலாக்கி இந்த மாகாண சபைத் தேர்தல் வைக்கப்படல் வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை வருமாக இருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வரும் என்றார்.

# பாராளுமன்றில் எதற்கும் கைதூக்கும் 'சிக்னல்' கம்பங்களினால் மக்களுக்கு பயன் இல்லை

## லால்காந்த தெரிவிப்பு

வத்துகாமம் நிருபர்

மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றாத பிரதிநிதிகளை பாராளுமன்றிலிருந்து மீள அழைக்கும் திட்டம் ஒன்றை நாம் கொண்டுவருவோம். பாராளுமன்றில் எதற்கும் கை தூக்கும் சிக்னல் கம்பங்களினால் மக்களுக்கு பயன் இல்லை. எமது கையில் 5 வருடம் ஆட்சியைத் தாருங்கள். நாட்டை மீளக்கட்டி எழுப்பி முறையான தேசத்தை உங்கள் கைகளில் ஒப்படைப்போம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் உயர்பீட உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.



கலகெதர பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஒரு மாதத்திற்கு முன்பு நாடு இருந்த நிலையை விட இன்றைய நிலையில் பாதகமான மாற்றங்கள் காணப்படுகின்றன . நிலைமை வரவர மோசமடைகிறது. அதள பாதாளத்தை நோக்கி நாடு செல்கிறது. எமது கையில் 5 வருடம் ஆட்சியைத் தாருங்கள். நாட்டை மீளக்கட்டி எழுப்பி முறையான தேசத்தை உங்கள் கைகளில் ஒப்படைப்போம். நாம்தான் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு என பொதுமக்கள் வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

நாட்டு மக்களை அரசு ஏமாற்றுகிறது. எமது இனம்,தேசிய பாதுகாப்பு எனக் கூறி கிராமப்புற மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

நாம் இதுகால வரை ஆட்சியை எம்மிடம் ஒப்படைக்கும் படி கேட்கவில்லை. இப்போது கேட்கிறோம். ஏனென்றால் அதற்கான காலம் வந்துள்ளது.

நாட்டை பாதாள எல்லைக்கே கொண்டுபோய் நிறுத்தி உள்ளனர். இதற்கு மேல் கொண்டுபோக இடமில்லை. சீனப் பசளை தொடர்பாக எமது நாட்டுத் தலைமைகள் கையாண்ட முறை தவறானது. சீனப் பசளை என்ற பெயரில் கழிவுகள்தான் வந்தன.

இது சீனாவின் பிரச்சினையல்ல. இது எமது பிரச்சினை. எமது நாடு கேட்கும் தரத்துக்கு பொருத்தமான பொருளையே இறக்குமதி செய்ய வேண்டும். தவறு எமது அரசியல் நிர்வாகத்திடமே உள்ளது. சீனப் பசளைக்கு பணம் கொடுக்க வேண்டி வரும் என இதற்கு முன் நான் கூறினேன். அது நடந்துவிட்டது. அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பொதுமக்கள் பணம் விரயம் செய்யப்படுகிறது.

சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீடுகள் எமக்குண்டு. அதனை கவனத்திற்கொள்ளாது எமது நிலையை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டை கொள்ளை அடித்து டொலர் பிரச்சினையை தீர்க்க முடியாது.

மக்கள் தமது பொறுப்பை நிறைவேற்றி உள்ளனர். வரி செலுத்துகின்றனர். கூடிய விலையில் பொருட்களை வாங்குகின்றனர். திறைசேரி அதனை சரியாக நெறிப்படுத்த வேண்டும். அதற்கு பாராளுமன்றம் வழிகாட்ட வேண்டும். இன்று பாராளுமன்றில் இருப்பவர்கள் ஜனாதிபதியின் கைப்பொம்மைகள்.

மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றாத பிரதிநிதிகளை பாராளுமன்றிலிருந்து மீள அழைக்கும் திட்டம் ஒன்றை நாம் கொண்டுவருவோம். பாராளுமன்றில் எதற்கும் கை தூக்கும் சிக்னல் கம்பங்களினால் மக்களுக்கு பயன் இல்லை என்றார்.

# மக்கள் ஆட்சியை உறுதிப்படுத்தவே யாழ். மாநகர சபை பட்ஜெட்டுக்கு ஆதரவு: ஈ.பி.டி.பி.தெரிவிப்பு

மக்கள் நலனை முன்னிறுத்தியதான எமது கட்சியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு அமைய மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி ஒன்று மக்கள் மத்தியில் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதை முன்னிறுத்தியே இவ்வருடத்திற்கான யாழ். மாநகர சபையின் பட்ஜெட்டுக்கு தமது கட்சி ஆதரவை வழங்கி வெற்றிபெறச் செய்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தோற்கடிக்கப்படும் என பலராது ஆருடங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முதல்வர் மணிவண்ணன் தரப்பினரது தலைமையிலான யாழ். மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் புதன்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முழுமையான ஆதரவுடன் மேலதிக 3 வாக்குகளால் வெற்றிபெற்றது.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் மேலும் கூறுகையில்,

கடந்த 2018 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் பெறுபேறுகளுக்கு அமைய யாழ். மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குள் இருக்கும் ஊர்காவற்றுறை பிரதேச சபையைத் தவிர எந்தவொரு கட்சியும் சபைகளை ஆட்சி செய்வதற்கான பெரும்பான்மையை பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எமது கட்சியின் நிலைப்பாட்டுக்கு அமைவாக மக்களின் நலன்சார் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு சபைகளின் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளால் தான் செயற்படுத்த வேண்டும் என்பதற்கு இணங்க குறித்த சபைகளின் ஆட்சி அதிகாரங்களை பொறுப்பேற்க யார் முன்வருகின்றார்களோ அவர்களுக்கு பங்காளிகளாக அல்லாது ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை வழங்க முன்வந்திருந்தது.

அதனடிப்படையில் கடந்த வருடம் நடைபெற்ற பட்ஜெட்டின் போது மக்களது நலன்களை புறக்கணித்து தன்னிச்சையான செயற்பாடுகளை மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பட்ஜெட்டை தோற்கடித்து தற்போதைய முதல்வர் தலைமையிலான தரப்பினருக்கு ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பத்தை நாம் வழங்கியிருந்தோம்.

இந்நிலையில் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை முதல்வர் மணிவண்ணன் சபையில் முன்வைத்திருந்த நிலையில் அதை தோற்கடிப்பதற்கான முயற்சிகள் பலதரப்பினராலும் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் மக்கள் நலனையே முதன்மையாகக் கொண்டு சேவைகளை முன்னெடுத்துவரும் எமது கட்சி, குறுகிய சுயநலன்களுக்கு இடங்கொடாது மக்கள் ஆட்சி தொடர்ந்தும் எமது யாழ். மாநகர சபையில் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் குறித்த பட்ஜெட்டை ஆதரித்து மக்களின் சேவையை தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதிகள் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்தி வெற்றியடையச் செய்துள்ளோம் என்றனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு ஆயுதமே கூட்டு ஒப்பந்தம்

## இ. தொ.கா. உப தலைவர் சக்திவேல்

பத்தனை நிருபர்



கூட்டு ஒப்பந்தம் தான் தோட்டத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு ஆயுதம். இதனை ஏனைய தொழிற்சங்கங்களும் உணர்ந்துள்ளன. எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயம் கிட்டும் வரை நாம் ஓயப்போவதில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான பழனி சக்திவேல் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் விசேட பிரதிநிதியாக சக்திவேல் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளில், அக்கரப்பத்தனை பிளான்டேஷன்தான் மிகவும் மோசமான முறையில் செயற்படுகின்றது. தொழில் அமைச்சின் தீர்மானங்களைக்கூட குறித்த பிளான்டேஷன் பின்பற்றுவதில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் எட்டப்பட்டு, அது தொடர்பான அரசிதழும் வெளியிடப்பட்டது. எனினும், இந்த சம்பள உயர்வை வழங்குவதற்கு அக்கரப்பத்தனை பிளான்டேஷன் பின்வாங்குகின்றது.

கொழுந்தே இல்லாத தேயிலை மலையில் 20 கிலோ பறிக்குமாறு தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அரைநாள் பெயரே திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்படுகின்றது. சூழ்ச்சிகரமான திட்டம் மூலம் மேலதிக கொழுந்துக்கு 40 ரூபா வழங்கப்படுகின்றது. இந்த அணுகுமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எவ்வித தொழில் சுமையும் அதிகரிக்காத வகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, கூட்டு ஒப்பந்தத்தின் அருமையை மக்கள் இன்று உணர்ந்துள்ளனர். அந்த ஒப்பந்தம்தான் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புக் கவசம். ஏனைய தொழிற்சங்கங்களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, அந்த ஒப்பந்தம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

கூட்டு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தாலும் ஆயிரம் ரூபா சம்பளத்தில் மாற்றம் எதுவும் வராது. அது தொழிலாளர்களுக்கு உரிய வகையில் கிடைப்பதை உறுதிசெய்வோம் என்றார்.

# மத்திய மாகாணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர் உதவியாளர் 306 பேருக்கும் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

கினிகத்தேனை நிருபர்

மலையக தோட்டப்புற பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் வகையில் 2015 ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்கள் நியமனம் வழங்கப்பட்டது. அதன் பின் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக நியமனங்கள் வழங்கப்பட்டன. எனினும் 6 வருடங்கள் கடந்தும் மத்திய மாகாணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர் உதவியாளர்கள் 306 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஆளுநருக்கு உடனடியாக நியமனத்தை வழங்கக்கோரி கோரிக்கையை முன்வைத்துள்ளதாக சங்கத்தின் பிரதித் தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

2016/05/16 ஆம் திகதி நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்கள் 2019/10/01 ஆம் திகதிக்கு இரண்டு வருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியையும் அதன்பின் நடைபெற்ற பரீட்சையில் சித்தியினையும் பெற்றுள்ளதால் நியமனங்களை உடனடியாக வழங்கக்கோரி பல போராட்டங்களை மேற்கொண்ட போதும் அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்காமல் காலம் தாழ்த்தி வந்த மத்திய மாகாண கல்வி அமைச்சு 2021/12/15 ஆம் திகதி நியமனம் வழங்கப்படும் என ஆசிரியருக்கு கடிதங்களை அனுப்பி வைத்தது.

தமக்கு நியமனம் கிடைக்குமென மகிழ்ச்சியோடு எதிர்ப்பார்த்த ஆசிரியருக்கு மத்திய மாகாண கல்வி அமைச்சிடம் இருந்து நியமனம் வழங்கும் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் கொரோனா நோய் பரவல் காரணமாக தபால்மூலம் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்களை அப்போதுஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் அவர்களின் நியாயமான போராட்டங்களை கணக்கில் எடுக்காமல் அவர்களுக்கு அநீதி இழைத்தது போல் தற்போதைய அரசாங்கமும் மலையக மக்களுக்கு மாற்றாந்தாய் மனப்பாங்குடன் செயற்படுவதை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வன்மையாக கண்டிப்பதோடு இன்னும் ஒரு சில நாட்களில் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டாவிட்டால் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல வேண்டி வரும் என மத்திய மாகாண ஆளுநருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது என்றார்.

# பருவமழை காரணமாக நன்னீர் மீன்பிடி பாதிப்பு

நாவிதன்வெளி நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பருவ மழை காரணமாக மாவட்டத்தின் பல குளங்கள் வெள்ளத்தில் மூழ்கி வருவதால் வேளாண்மைகளும் நன்னீர்மீன்பிடியும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

குளங்கள் நீரில் மூழ்குவதால் குளங்களை அண்டி செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைகளும் பாதிப்படையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நற்பிட்டிமுனையை அடுத்துள்ள பிரசித்தி பெற்ற கிட்டங்கி தாம்போதியை அடுத்துள்ள தாழ்நில விவசாயமும் பாதிப்படைந்து வருகின்றது. தொடர் மழையால் கிட்டங்கி வாவியில் மீன்பிடிப்போர் மீன்பிடிப்பதை தவிர்த்தும் வருகின்றனர்.

# இறக்காமத்தை அக்கரைப்பற்று நியாயாதிக்க எல்லைக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை

## முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

பாலமுனை நிருபர்



இறக்காமம் பிரதேசத்தை அம்பாறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லையிலிருந்து விடுவித்து அக்கரைப்பற்று நியாயாதிக்க எல்லைக்குள் உள்வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

நீதியமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நீதியமைச்சர் அலி சப்ரி தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது, இதில் இறக்காமம் பிரதேசம் அம்பாறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உள்வாங்கப்பட்டிருப்பது தொடர்பாக நீதியமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இறக்காமம் பிரதேசம் தமிழ் மொழி பேசப்படும் பிரதேசமாகும். இருப்பினும் இது அம்பாறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் வழக்குகளுக்காக அம்பாறை நீதிமன்றத்துக்கு மக்கள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி உள்ளமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தமிழ் மொழி மூல வழக்குகளுக்காக சட்டத்தரணிகளை நாடுதல், முறைப்பாடுகளைக் கையளித்தல், வழக்கு நடவடிக்கைகள் போன்றவற்றில் மொழி தொடர்பான பல இன்னல்களை எதிர்கொள்வதாக தெரிவித்த போது இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் அலி சப்ரி இடமாற்று நடவடிக்கைகளை ஆரம்பித்து விரைவாக இப்பிரச்சினையை தீர்த்துத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளதாகவும் முஷாரப் எம்.பி.மேலும் தெரிவித்தார்.

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் உயர்ந்ததால் விற்பனையில் வீழ்ச்சி

தம்புள்ள நிருபர்

பேக்கரி உற்பத்திகளின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளதன் காரணமாக பாண் உள்ளிட்ட பேக்கரி உணவுப் பண்டங்களின் விற்பனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக மாத்தளை மாவட்ட பேக்கரி உணவுத் தயாரிப்போர் தெரிவிக்கின்றனர்.

கோதுமை மற்றும் அது சார்ந்த மூலப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டமையினால் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் அண்மையில் உயர்வடைந்திருந்தன.

பேக்கரி உற்பத்திகளின் பொருட்டு பயன்படுத்தப்படும் கோதுமை மா கிலோ ஒன்றின் விலையை குறித்த நிறுவனங்கள் 17 ரூபா 50 சதத்தினால் அதிகரித்ததைத் தொடர்ந்து பாண் ஒன்றின் விலை 10 ரூபாவினாலும் ஏனைய பணிஸ் போன்றவற்றின் விலைகள் 5 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டதனால் கடந்த சில தினங்களாக பேக்கரி உற்பத்திகளின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் பேக்கரி உணவு தயாரிப்போர் தெரிவிக்கின்றனர்.

கறி ரொட்டி, பற்றிஸ் உள்ளிட்ட சிற்றுண்டிகளின் விலைகளும் கட்டுப்பாடின்றி கணிசமாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் பேக்கரி உற்பத்திகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர். பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கு குறித்த விலைகள் காணப்படவில்லை எனவும் தாம் நினைத்த விலைகளில் அவற்றை விற்பனை செய்ய முயல்வதாகவும் இதனால் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் நுகர்வோர் மேலும் தெரிவிக்கின்றனர்.



மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தல் மற்றும் உட்படுத்தல் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனியொன்று காரைதீவில் பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், சமூக சேவை உத்தியோகத்தர் கு.குணரெட்ணம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சித்தி நளீபா, சமூக சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச மாற்றுத்திறனாளிகள் இதில் கலந்து கொண்டிருப்பதனை காணலாம்.

படம்:சம்மாந்துறை நிருபர்

# ஹப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக சேபால

பதுளை நிருபர்



ஹப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக சேபால ரட்னாயக்க புதன்கிழமை வைபவரீதியாக பதவியேற்றார்.

ஏற்கனவே, ஹப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த சாகர ரட்னாயக்க நியத்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக சென்றுள்ளார். அவ்வெற்றிடத்திற்கு ஹப்புத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக சேபால ரட்னாயக்க இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

# வை.எம்.எம்.ஏ. பேரவையின் உப தலைவராக தஸ்தகீர்

மாளிகைக்காடு நிருபர்



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய உப தலைவராக கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.தஸ்தகீர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் நீண்டகாலம் சாய்ந்தமருது வை.எம்.எம்.ஏ.இன் தலைவராக இருந்ததுடன், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர், கிழக்கு மாகாண போதைப்பொருள் தடுப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் போதைப்பொருள்தடுப்புப் பிரிவின் செயற்திட்டத்தவிசாளர் போன்ற பல பதவிகளிலிருந்து தேசிய ரீதியில் சேவையாற்றிய நிலையில் தற்போது உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# நகைச்சுவை எழுத்தாளர் ‘சண் அங்கிள்’ காலமானார்



நகைச்சுவை எழுத்தாளராக அறியப்பட்ட பொன்னையா சண்முகநாதன்(சண் அங்கிள்) புதன்கிழமை காலமானார். இறக்கும் போது அவருக்கு 82 வயது.

12-02-1939 இல் சங்குவேலியில் பிறந்த அவர், திருமணத்தின் பின்னர் கந்தரோடையில் வாழ்ந்து வந்தார். கலைச்செல்வி பண்ணைக்கூடாக எழுத்துலகுக்குள் பிரவேசித்த அவர் சிறுகதைகளையும் நகைச்சுவைப் புதினம் மற்றும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்கள் வெள்ளி வண்டி, இதோ ஒரு நாடகம், பெண்ணே நீ பெரியவன்தான், கொழும்புப்பெண், நினைக்க சிரிக்க சிந்திக்க, சிரிப்போம் சிந்திப்போம், நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. வலிதெற்கு பிரதேச செயலகத்தின் ஞானஏந்தல் விருது, கலாபூஷணம் (2008) விருது உட்பட பல விருதுகளைப் பெற்ற அவர், பத்தி எழுத்துக்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறந்த பத்தி எழுத்துக்கான ஊடகத்துறை விருதையும் 2004 ஆம் ஆண்டு பெற்றவராவார். அவரது இறுதி நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 75 ஆவது பவள விழா கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டத்தின் 75 ஆவது கவியரங்கம் மறைந்த ஸ்தாபக செயலாளர் கவின் கமல் அரங்காக எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.30 க்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம அதிதியாக தினகரன்-தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் கலந்து கொள்வார். வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் கலாபூஷணம் சத்திய எழுத்தாளர் நாகூர் கனி முன்னிலை வகிக்கிறார்.

வகவ செயலாளர் இனநெஞ்சன் முர்ஷிதீன் கவியரங்கினை தலைமையேற்று நடத்துவார். பொருளாளர் ஈழகணேஷ் வரவேற்புரையும், தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன் நன்றியுரையும் வழங்குவர்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் உபாயமுறைத் திட்டம் மாவட்ட குழுக்களின் கருத்துகளுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு நிருபர்

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவானது எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான உபாயமுறை திட்டமொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த திட்டத்திற்காக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கருத்துக்களை கேட்டறியும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் 'உபாயமுறைத் திட்டம் 2022-2025 மாவட்ட தரப்பு குழுக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கருத்தரங்கு' முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தால் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கா.காந்தீபனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபரும் தேர்தல்களின் போதான தெரிவத்தாட்சி அலுவலருமான க.விமலநாதன் கலந்து கொண்டிருந்தார்.

இதனூடாக தேர்தல் ஆணைக்குழுவானது தேர்தல் நடவடிக்கைகள் அதனுடன் இணைந்த செயற்பாடுகள், தேருநர் இடாப்பு மீளாய்வு, பொதுமக்கள் மற்றும் வாக்காளருக்காக மேற்கொள்ளக்கூடிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை உள்ளடக்கியதான பல்வேறு கருத்துக்களை எதிர்பார்க்கின்றது.

இத்தகைய கருத்துக்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள், ஊடகவியலாளர்கள், பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் பல்வேறுபட்ட சமூக அமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக குழுக்கள் அமைக்கப்பட்டு அதனூடாக பல்வேறு கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. இவை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் திடீரென உள்வாங்கிய கடல்

## சுனாமியென பீதியடைந்த சென்னை மக்கள்



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நள்ளிரவில் கடல் திடீரென உள்வாங்கியதால் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சென்னையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் மெரினா, பட்டினப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் திடீரென 10-15 மீட்டருக்கு கடல் உள்வாங்கியது. சுமார் அரைமணி நேரத்திற்கும் மேலாக கடல் உள்வாங்கியது. இதனால் மணற்பரப்பு அதிகளவில் தென்பட்டது.

நள்ளிரவில் கடற்கரைக்கு வந்திருந்த மக்கள் கடல் உள்வாங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அதற்கு பின் சுமார் அரை மணிநேரத்திற்கு பிறகு கடல் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியது. இதனால் அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்னர் இந்தோனேஷியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 7.6ஆக பதிவானதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், இந்தியாவில் பாதிப்பு ஏற்படுமோ என்ற ஐயம் ஏற்பட்ட நிலையில் எந்த ஒரு பாதிப்பும் இல்லை என இந்திய சுனாமி மையம் தகவல் தெரிவித்திருந்த நிலையில் கடல் திடீரென உள்வாங்கிய சம்பவம் சென்னை மக்களிடையே அச்சத்தையும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தேசிய போர் நினைவுச் சின்னத்தில் வெற்றிச்சுடர் ஏற்றிய பிரதமர் மோடி



பாகிஸ்தானுடனான போரில் வெற்றி பெற்றதை கொண்டாடும் வகையில், தேசிய போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் மோடி வெற்றிச்சுடர் ஏற்றி வைத்தார்.

இந்தியாவுக்கும்-பாகிஸ்தானுக்கும் இடையில் 1971 ஆம் ஆண்டு போர் நடைபெற்றது. இதில் இந்தியா வெற்றி பெற்றது. இந்தியா வெற்றி பெற்று 50 ஆண்டுகள் ஆகிறது.

பாகிஸ்தானை போரில் வென்ற தினத்தை கொண்டாடும் வகையில் தேசிய போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் மோடி வெற்றி சுடரை ஏற்றி வைத்தார். பின் வெற்றிச்சுடர் அணையாத விளக்குடன் இணைக்கப்பட்டது.

அத்துடன் தேசிய போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# 12 மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு

## ஆசிரியர் அதிரடி கைது

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள கீழ் கோத்தகிரியில் அரச பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

குறித்த பாடசாலையில் கோத்தகிரி டானிங்டன் பாரதி நகரை சேர்ந்த முரளிதரன் (வயது 46) என்பவர் வரலாறு ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் பாடசாலைமாணவிகளிடம் ஆபாசமாக பேசுவது, கன்னத்தை தொடுவது என மாணவிகளுக்கு தொடர்ந்து பாலியல் தொந்தரவு கொடுத்து வந்தாக கூறப்படுகிறது.

இதனால் பாதிக்கப்பட்டு, மன உளைச்சலுக்கு ஆளான மாணவிகள் 12 பேர் இதுகுறித்து பாடசாலைதலைமை ஆசிரியையிடம் முறைப்பாடு செய்தனர். இதனைத்தொடர்ந்து தலைமை ஆசிரியை, சோலூர் மட்டம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முந்தினம் முரளிதரனை பொலிஸார் கைது செய்தனர். பின் அவரை பொலிஸார் குன்னூர் நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தி, கூடலூர் கிளை சிறையில் அடைத்தனர்.

# சென்னை போர் நினைவிடத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் மரியாதை



பாகிஸ்தானுடனான போரில் இந்தியா வெற்றி பெற்றதன், 50 ஆவது ஆண்டு தினத்தை ஒட்டி, சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள போர் நினைவுச் சின்னத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

போரில் இந்தியா வெற்றி பெற்றதன் நினைவாக ஆண்டுதோறும் டிசம்பர் 16 ஆம் திகதி விஜய் திவாஸ் என்ற தலைப்பில் வெற்றிவிழா கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில், சென்னையிலுள்ள போர்நினைவுச் சின்னத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். முன்னதாக, முப்படைகளின் வீரர்கள் அணிவகுப்பு மரியாதை செய்து, மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

போரில் உயிர்தியாகம் செய்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரும் மரியாதை செலுத்தினர்.

# நீரோடையில் பஸ் வீழ்ந்து விபத்து

## ஆந்திராவில் 9 பேர் பலி

ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் பஸ் ஒன்று நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



47 பேருடன் பயணித்த பஸ்ஸொன்றை நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஜல்லேரு வாகு என்ற நீரோடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. உயிரிழந்தவர்களில் பஸ்ஸின் சாரதியும், 5 பெண்களும் அடங்குவர்.

இந்த விபத்து குறித்து கவலை தெரிவித்துள்ள ஆந்திர மாநில ஆளுநர் பிஸ்வா பூஷன் ஹரிசந்தன், காயமடைந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# முப்படை தளபதிகளின் தலைவராக எம்.எம். நரவானே நியமனம்




இராணுவ உலங்குவானூர்தி விபத்தில் முப்படைத் தளபதி பிபின் ராவத் உயிரிழந்த நிலையில், தற்போது அந்த பதவி நிலைக்கு நரவானே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் முப்படைகளுக்கும் தலைமை தளபதியாக இருந்தவர் பிபின் ராவத். குன்னூரில் நடைபெற்ற இராணுவ உலங்குவானூர்தி விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

இதில் இராணுவ தளபதி பிபின் ராவத்தும் ஒருவர். இதனால் முப்படைகளுக்கான தலைமை தளபதி பதவி தற்காலிகமாக இருந்தது.

இந்த நிலையில் முப்படை தலைமை தளபதி தேர்வு செய்யப்படும் வரை எம்.எம். நரவானே குழு தலைவராக செயல்படுவார் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

# இந்தியாவின் 2 ஆவது நாளாகவும் உயர்ந்த தொற்றாளர்களின் தொகை



இந்தியாவில் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கொரோனா பாதிப்பு நிலவரம் தொடர்பாக மத்திய சுகாதாரத்துறை நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நேற்றுக் காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் புதிதாக 7,974 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக கேரளாவில் 4,006 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நிலவரப்படி பாதிப்பு 6 ஆயிரத்துக்கும் கீழ் சென்றது. மறுநாள் 6,984 ஆக உயர்ந்த நிலையில், தொடர்ந்து 2 ஆவது நாளாக பாதிப்பு சற்று அதிகரித்துள்ளது. மொத்த பாதிப்பு 3 கோடியே 47 இலட்சத்து 18 ஆயிரத்து 602 ஆக உயர்ந்தது.

கொரோனா பாதிப்பால் கேரளாவில் 282 பேர் உட்பட நாடு முழுவதும் மேலும் 343 பேர் இறந்துள்ளனர். இதனால் மொத்த பலி எண்ணிக்கை 4,76,478 ஆக உயர்ந்தது.

தொற்று பாதிப்பில் இருந்து மேலும் 7,948 பேர் மீண்டுள்ளனர். இதுவரை குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 3 கோடியே 41 இலட்சத்து 54 ஆயிரத்து 879 ஆக அதிகரித்துள்ளது. தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை 87,245 ஆக குறைந்துள்ளது என்றுள்ளது.


## செலான் வங்கி பீ.எல்.சீ.

[illegible]

கிளை : [illegible]
கணக்கு இலக்கம் : 0450-32534600-001

[illegible]

## பொது மக்களுக்கான அறிவித்தல்



ஆறுமுகம் அரவிந்த குமார்
953134616V

2021 டிசம்பர் 7 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் **Copreus Private Limited** இல் மேற்படி பெயரைக் கொண்ட நபர் பணியில் இல்லை எனும் அறிவித்தலை நிறுவனம் பொது மக்களுக்கு இத்தால் வழங்குகின்றது. அதன் பிரகாரம், அவர் பின்வரும் நிறுவனங்கள் சார்பாக எந்தவித வியாபார கொடுக்கல் வாங்கல்கள் அல்லது இதுதொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எவ்வித அதிகாரத்தையும் கொண்டிருக்கமாட்டார்.

1) Copreus (Pvt) Ltd
2) Premium Support (Pvt) Ltd
3) SecureCollect (Pvt) Ltd
4) Lead Capital Corporation (owner-operator of www.fmg.com)
5) Gulf Brokers LTD (owner-operator of www.gulfbrokers.com)

**ஆறுமுகம் அரவிந்தகுமாருடன் மேற்கொள்ளப்படும் ஈடுகொடுக்கல் வாங்கல்களுக்குமான பொறுப்பையும் அந்தந்த வாடிக்கையாளர்கள் ஏற்க வேண்டும் என்பதுடன், மேலேகுறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அதற்கான பொறுப்பை ஏற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

Copreus (Pvt) Ltd
Level 19, World Trade Center, Colombo 01
www.copreus.com

## பொது மக்களுக்கான அறிவித்தல்



பிலால் நிலாம் தீன்
921151241V

2021 டிசம்பர் 7 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் Copreus Private Limited இல் மேற்படி பெயரைக் கொண்ட நபர் பணியில் இல்லை எனும் அறிவித்தலை நிறுவனம் பொது மக்களுக்கு இத்தால் வழங்குகின்றது. அதன் பிரகாரம், அவர் பின்வரும் நிறுவனங்கள் சார்பாக எந்தவித வியாபார கொடுக்கல் வாங்கல்கள் அல்லது இதுதொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எவ்வித அதிகாரத்தையும் கொண்டிருக்கமாட்டார்.

1) Copreus (Pvt) Ltd
2) Premium Support (Pvt) Ltd
3) SecureCollect (Pvt) Ltd
4) Lead Capital Corporation (owner-operator of www.fmg.com)
5) Gulf Brokers LTD (owner-operator of www.gulfbrokers.com)

**பிலால் நிலாம் தீனுடன் மேற்கொள்ளப்படும் ஈடுகொடுக்கல் வாங்கல்களுக்குமான பொறுப்பையும் அந்தந்த வாடிக்கையாளர்கள் ஏற்க வேண்டும் என்பதுடன், மேலேகுறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் அதற்கான பொறுப்பை ஏற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.**

Copreus (Pvt) Ltd
Level 19, World Trade Center, Colombo 01
www.copreus.com

# வீடற்று தாய்நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை எதிர்வரும் ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



வீடற்ற நிலையில் தாய்நாட்டில் விடுதியில் வாழ்வது போன்ற யுகத்தை எதிர்வரும் ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் 800 பேருக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் களனிவெளி புகையிரதப் பாதையை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் போது அகற்றப்பட்ட மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட 528 வீடுகளைக் கொண்ட கொலொம்தொட சரசவி உயன தொடர் மாடிக் குடியிருப்பை புதன்கிழமை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில்,

வீடற்ற மக்களுக்கு அவர்களின் தாயகத்தின் உண்மையான உரிமைகளை வழங்குவதே எமது நோக்கம். நாங்கள் அமுல்படுத்தும் வீட்டுத் திட்டங்களில் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு கிடையாது. மேலும், கட்சி பிளவு இல்லை. வீடற்றவர்கள் தன் சொந்த ஊரில் விடுதியில் குடியிருப்பவனைப் போன்றவர்கள் என்பதை நினைவில் வையுங்கள். இன்னும் சில வருடங்களில் அந்த சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும். ஒரு கொள்கையுடன் நாம் இந்த வீட்டுத் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இது அரசியல் உள்நோக்கம் கொண்ட திட்டம் அல்ல.

கடந்த காலங்களில் வீடுகளை கட்டுவதை விட வீடுகளை கட்டுகிறோம் என்று கூறுவதற்கு பணத்தை செலவு செய்த அரசாங்கங்கள் இருந்தன. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களுக்கான விளம்பரச் செலவு கோடிக்கணக்கான ரூபாவாகும். அந்தப் பணத்தில் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டியிருக்கலாம்.

நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 2024 ஆம் ஆண்டுக்குள் 50,000 வீடுகளை கட்டி முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 14,063 வீட்டு மனைகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, கொழும்பு பிரதேசத்தில் தற்போதுள்ள குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளை 2024 ஆம் ஆண்டளவில் நவீன அடுக்கு மாடி குடியிருப்புகளாக மாற்றுவதற்கு திட்டங்களை வகுத்துள்ளோம்.

அப்போது கொரியாவை விரும்பத்தகாத சேரிச் சூழல் என்றோம். ஆனால் இன்று கொரியா உயர் வளர்ச்சியுடன் கூடிய அழகான நாடு. சீனாவையும் அவமதித்த காலம் ஒன்று இருந்தது. இன்று, சீனா உலகின் சக்திவாய்ந்த நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. அரசியல் நோக்கத்திற்காக அன்றி, நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்தே நாம் இந்த வீட்டுத் திட்டத்தை செயல்படுத்துகிறோம் என்றார்.

முல்லைத்தீவில்

# சேஜய நுண்நிதி நிறுவனம் திறப்பு

முல்லைத்தீவு நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேஜய நுண்நிதி நிறுவன கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமையில் குறித்த சேஜய நுண்நிதி நிறுவன கிளை திறந்து வைக்கப்பட்டது. முல்லைத்தீவு சேஜய நுண்நிதி நிறுவன கிளை முகாமையாளர் யதுர்சன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சேஜய நுண்நிதி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரின்ஸ்நாயகம் கலந்து கொண்டு கிளையினை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் சேஜய நுண்நிதி நிறுவனத்தின் வட பிராந்திய முகாமையாளர் கணபதிப்பிள்ளை ஏகலைவன், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சண்முகராஜா சுபூரதன், யாழ். போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட மருத்துவர் வைத்திய கலாநிதி சண்முகராஜா, சேஜய நுண்நிதி நிறுவன கிளிநொச்சி முகாமையாளர், சேஜய நுண்நிதி நிறுவன ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாணவர் மத்தியில் மர நடுகை திட்டத்தை ஊக்குவிக்க த.தே.ம.மு. நடவடிக்கை



வாழைச்சேனை நிருபர்

மாணவர்கள் மத்தியில் மரம் வளர்க்கும் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பழவகை மரங்கள் வழங்கும் செயற்திட்டம் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைப்பின் கீழ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அணித் தலைவர் ப.துசானந்தன் தலைமையில் பாண்டிருப்பு மகா வித்தியாலயம் மற்றும் பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்புடன் சுமார் 250க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இவ்வாறு பழ மரக் கன்றுகள் வழங்கப்பட்டதுடன், பாடசாலை வளாகத்தினுள்ளும் மரக்கன்றுகள் நடும் செயற்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.



வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியின் 1994 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நீர்கொழும்பு கொழும்பு ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்கள் பழைய மாணவர்களுடன் இருப்பதை காணலாம்.

# தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்த அருட்தந்தை ஜோன் ஹேர்பட்டின் சிலை திறப்பு

மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல்கொடுத்த நிலையில் காணாமல்போயிருந்த அருட்தந்தை ஜோன் ஹேர்பட்டின் திருவுருவச்சிலை மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது.

ஊறணி சந்தியில் வாவிக்கரை பூங்காவுக்கு அருகில் இந்த சிலை திறந்துவைக்கப்பட்டது. இலங்கை ஜேசு சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த சிலையின் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்துவைத்தார்.



இந்த திறப்பு விழாவில் இலங்கை ஜேசு சபையின் தலைவர் உட்பட அருட்தந்தையர்கள், ஜேசு சபை துறவிகள் என பலர் கலந்துகொண்டனர். 1948 ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து மட்டக்களப்புக்கு வருகைதந்த அவர் புனித மைக்கேல் கல்லூரி ஆசிரியராகவும் தொழிநுட்ப பயிற்சிக் கல்லூரியின் ஸ்தாபகராகவும் செயற்பட்டதுடன் மட்டக்களப்பின் விளையாட்டுத்துறைக்கும் அரும்பங்காற்றியுள்ளார்.

அத்துடன் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற பல்வேறு கடத்தல்கள், படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச ரீதியாக குரல் கொடுத்தும் வந்துள்ளார்.

இந்தநிலையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏறாவூர் பகுதி ஊடாக பயணித்துக் கொண்டிருந்தபோது அருட்தந்தை காணாமல்போயிருந்தார்.

நாலந்த எல்லாவல கைத்தொழில் கிராமத்தில்

# முதலாவது கித்துல் உற்பத்தி நிலையம் திறப்பு

பெல்மதுளை நிருபர்

கித்துல் மரத்திலிருந்து பெறப்படும் தெலிஜ்ஜயைக் கொண்டு முதலாவது கித்துல் கைத்தொழில் நிலையம் ஒன்று குருவிட்ட பரடைஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள நாலந்த எல்லாவல கைத்தொழில் கிராமத்தில் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, கித்துல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த கித்துல் கைத்தொழில் உற்பத்தி நிலையத்தில் கித்துல் மரத்திலிருந்து பெறப்படும் தெலிஜ்ஜியைக் கொண்டு கித்துல் பாணி, கித்துல் கருப்பட்டி, கித்துல் கல் உட்பட பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சர்வதேச சந்தையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, காமினி வலேபொட உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரப்பத்தனை பிரதேச சபைத் தவிசாளரின் செயலைக் கண்டித்து லிந்துலையில் போராட்டம்

## சவால்களை எதிர்கொள்ளத் தயார் என்கிறார் தவிசாளர்

பத்தனை நிருபர்

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தவிசாளர், மக்களின் வரிப்பணத்தை முறைகேடாக பயன்படுத்துகிறார் எனவும் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வியாபார நோக்கில் கடைகளை அமைக்கிறார் எனவும் குற்றஞ்சாட்டி, அதற்கு எதிராக தொழிலாளர் தேசிய சங்கத்தின் அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர்களும் பிரதேச மக்களும் நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்ற வேளையிலேயே லிந்துலை நாகசேனையில் உள்ள சபைக்கு முன்னால் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும், சபை தவிசாளரின் செயலைக் கண்டித்தும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உப தலைவரும், அக்கரப்பத்தனை பிரதேச சபையின் உறுப்பினர் வே.சிவானந்தன் மற்றும் உறுப்பினர் எஸ்.சுதாகர் ஆகிய இருவருமே வெளிநடப்பு செய்தனர்.



அக்கரப்பத்தனை, மன்றாசி நகரிலுள்ள புதிய பாலத்துக்கு அருகில் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காகவே அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் பஸ் தரிப்பிடம் அமைக்காமல், தனக்கும் தனது சகாக்களுக்கும் தவிசாளர் கடைகளை அமைத்து வருகின்றார். சட்டவிரோதமாகவே இதற்கான நடவடிக்கை இடம்பெறுகின்றது. தோட்ட அனுமதியின்றி காணி கவீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கட்டாயம் பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டும், மக்களின் வரிப்பணத்தை தவிசாளர் முறையாக பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அதேவேளை, இது தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளரிடம் வினவியபோது, பஸ் தரிப்பிடமே உரிய அனுமதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. எஞ்சிய இடத்தில்தான் மக்களின் நலன் கருதி கடைகள் அமைக்கப்படுகின்றன. இதற்கு சட்டப்பூர்வமான அனைத்து அனுமதியும் உள்ளது. தேவையான ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனினும் எதிரணியிலுள்ள இருவரே இதனை குழப்பும் நோக்கில் தவறான கருத்துகளை பரப்பி வருகின்றனர். அனைத்து ஆவணங்களும் சட்டப்பூர்வமாகவே உள்ளன. எனவே, சவால்களை எதிர்கொள்ள நான் தயார் என்றார்.



# IFC இன் CAFI விருதை வென்றுள்ள இலங்கையின் ஒரே வங்கியான கொமர்ஷல் வங்கி

இலங்கையின் முதலாவது முழு அளவிலான காபன் சமநிலை வங்கியான கொமர்ஷல் வங்கி சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்திடம் (IFC) இருந்து நிதி நிறுவனங்களுக்கான காலநிலை மதிப்பீட்டுக்கான (CAFI) இரண்டு விருதுகளை வென்றுள்ள இலங்கையின் ஒரே வங்கியாகவும் சாதனை படைத்துள்ளது.



இந்த சாதனைமிகு காலநிலை தாக்க விருதுகள் 2020 ஆம் ஆண்டு தெற்காசியாவில் வங்கியின் மதிப்பிடப்பட்ட பச்சைவாயு (CHG) குறைப்பு, அதிகபட்ச காலநிலை நிதி கொடுக்கல், வாங்கல்களை பூர்த்திசெய்தமை என்பனவற்றுக்கான அங்கீகாரமாக வழங்கப்பட்டுள்ளன.

IFC ஆல் முதல் தடவையாக தமது காலநிலை தாக்க இலக்குகளை எட்டும் நிதி நிறுவனங்களுக்குரிய அங்கீகாரமாக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் கொமர்ஷல் வங்கியின் செயற்பாடு 208400 தொன் காபன் இருநீறு ஒக்ஸைட் வெளியேற்றத்துக்கு சமமான (tCO2e) பச்சை வீட்டு வாயுவுக்கு சமனானதாகும். இது வீதிகளில் 40000 கார்களில் இருந்து வெளியேறும் வாயுவுக்கு நிகரானதாகும். அத்தோடு 416 பசுமைக் கடன்கள் அல்லது காலநிலை நிதிப் பரிமாற்றம் என CAFI வகைப்படுத்தலையும் உள்ளடக்கியது.

COMMERCIAL BANK

CHG குறைப்பு மற்றும் காலநிலை நிதி என்பன தொடர்பாக தெற்காசியாவில் உள்ள தனது வாடிக்கையாளர்கள் சமர்ப்பித்த தரவுகளை மதிப்பீடு செய்தே IFC மேற்படி விருதுக்குகொமர்ஷல் வங்கியைத் தெரிவுசெய்துள்ளது. தொடர்பான செயற்பாடுகளை கணிக்கும் தனது டிஜிட்டல் செயற்பாட்டை பயன்படுத்தி இந்த மதிப்பீடுகளைச் செய்துள்ளது. இந்த விருதுகள் பற்றி IFC இன் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர்ஹெக்டர் ஓமஸ் ஆங் கருத்து வெளியிடுகையில்,

தனியார் நிறுவனங்கள் காலநிலை மாற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்குவதற்கான ஒரு வாய்ப்பாக அவர்கள் இதை அணுக வேண்டும். இவை வர்த்தகரீதியான சாதகத்தைக் கொண்டிருப்பதோடு நாடுகளின் பொருளாதார பரிமாற்றத்துக்கு உதவுகின்றன. கொமர்ஷல் வங்கி இலங்கையில் IFC செயற்பாடுகளில் ஒரு நீண்டகால பங்காளியாகும். இந்தப் பெறுபேறுகள் எம்மை பெருமை அடையச் செய்கின்றன. நாடு முழுவதுக்குமான கொமர்ஷல் வங்கியின் பசுமை முதலீட்டுத் தாக்கம் இலங்கையை மேலும் நிலைபேறுகொண்ட மீண்டுவரும் எதிர்காலத்தை நோக்கிய பரிமாற்றத்துக்கு உதவுகின்றன என்று கூறினார்.

வங்கியின் இந்த குறிப்பிடத்தக்க சாதனை பற்றி கருத்துத் தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான எஸ்.ரெங்கநாதன்,

இந்த விருதுகளை வென்றுள்ளமை எமக்கு உண்மையில் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றன. காரணம் காலநிலை நிதி மற்றும் காபன் பதிவு குறைப்பு எப்போதுமே எமக்கு முதன்மையான விடயங்களாக இருந்துள்ளன. தெற்காசியாவில் காலநிலை நிதியில் ஆதிக்கம் செலுத்தும் மற்றும் கற்றாடல் அக்கறைகொண்ட முதன்மை நிலையில் இந்த விருது கொமர்ஷல் வங்கியைக் கொண்டுவந்துள்ளது. ஒரு நிறுவனம் என்றரீதியில் இந்த விருதுகளை வென்ற பின்னரும் காபன் பதிவுகுறைப்பில் நாம் தொடர்ந்தும் உறுதியோடும் ஈடுபாட்டோடும் செயற்படுவோம் என்றார்.

# தொடர்ந்து 9 ஆவது ஆண்டாக பணியாற்ற உகந்த பணியிடங்கள் விருதுகளில் DIMO பிரகாசிப்பு

இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, சமீபத்தில் நடைபெற்ற Great Place to Work (GPTW) விருது வழங்கும் விழா 2021 இல், தொடர்ந்து 9 ஆவது ஆண்டாகபணியாற்றுவதற்கான சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 2 ஆவது முறையாக "Asia's Best Workplace 2021' (ஆசியாவின் சிறந்த பணியிடம்) பட்டத்தையும் வென்றுள்ளது. அத்துடன், நிறுவனத்தின் சிறந்த மக்கள் நடைமுறைகளுக்கான விருதுகளான திறமை ஈர்ப்பு, உள்வாங்குதல் அடிப்படையில் மக்கள் முன்முயற்சிகளில் சிறந்து விளங்குதல் விருது மற்றும் உள்ளடக்கிய கலாசார அடிப்படையில் மக்கள் முன்முயற்சிகளில் சிறந்து விளங்குதல் விருது ஆகிய இரண்டு வகை விருதுகளையும் DIMO பெற்றது.

DIMO ஆனது அதன் பல்வேறுபட்ட பணியாளர்களுக்கும் 'வேலையை இன்பமாக்குதல் மற்றும் வெகுமதி அளிப்பது'



எனும் அதன் பணியாளர் மதிப்பு முன்மொழிவை உண்மைப்படுத்தியுள்ளதுடன், ஒரு வியக்கத்தக்க தொழில் வழங்குனராக அதன் பல்லாண்டு கால அங்கீகாரத்தை தக்கவைத்துள்ளது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கனவுகள் மற்றும் அபிலாஷைகளைத் தூண்டி, 1,800 இற்கும் மேற்பட்ட அதன் ஊழியர்களின் திறமையைக் கடந்து, ஒவ்வொரு குழு உறுப்பினரின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சியை அவர்கள் கொண்டுள்ள விசேடத்துவ பகுதியை பொருட்படுத்தாமல் தொடர்ந்து அவர்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் தனித்துவமான திறன்களை DIMO உறுதியாக புரிந்துகொள்கிறது. நல்ல திறமைகளுக்கு திரையிடுவதற்கான வாய்ப்புகளைத் தவிர, மாற்றத்திற்கு பதிலளிக்கும் திறனுடன் தலைமைத்துவத் திறன்களுடன் சான்றளிக்கப்படுகிறார்கள். நிறுவன கட்டமைப்பின் ஒவ்வொரு இளையிலும் பன்முக படைப்பாற்றலை கொண்டிருப்பதன் மூலம் நிறுவனம் கொண்டுள்ள பன்முகத்தன்மை ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. பக்கச்சார்பற்ற திறமையை வளர்ப்பதற்கான நீண்டகால நடவடிக்கைகள் மூலம், இவ்வருடம் திறமையை ஈர்த்தல் மற்றும் ஈடுபாடு தொடர்பான மக்கள் முன்முயற்சிகள் பிரிவில் DIMOவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பது நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நிலைபேறான இலக்குகளில் ஒன்றாகும் என்பதுடன், நிறுவனத்தில் பாலின சமத்துவத்தை மேம்படுத்த DIMO உறுதிபூண்டுள்ளது. அதன் நிலைபேறான தன்மை நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, 2025 ஆம் ஆண்டிற்குள் முடிவெடுக்கும் பதவிகளில் பெண்களை 10% தொடக்கம் 40% ஆக உயர்த்துவதற்கான இலட்சிய இலக்கை DIMO நிர்ணயித்துள்ளது. ஊழியர்கள் தொடர்பான பொறுப்புகளை ஆதரிப்பதை உள்ளடக்கிய, மாற்றுத்திறனாளிகளை சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்கள் மீது பாகுபாடு காட்டாமை உள்ளிட்ட பன்முகத்தன்மையின் ஒவ்வொரு தன்மையையும் முன்னேற்ற DIMO ஒரு நிலையான உந்துதலைக் கொண்டுள்ளது.

DIMOவின் தலைவரும் நிர்வாகப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே இது தொடர்பில் தெரிவிக்கையில்,

இந்த அங்கீகாரம் மூலம், கொவிட் தொற்றுநோயின் சவால்களை நாம் எவ்வளவு வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளோம் என்பதையும் புதிய வேலை முறைகளுக்கு ஏற்றவாறு நாம் எவ்வாறு எம்மை மாற்றியமைத்துள்ளோம் என்பது தொடர்பிலும் DIMO மிகவும் திறமையான மற்றும் ஈடுபாடுள்ள பணிக்குழாமை கொண்டுள்ளது என்பதும் என்னால் அளவிட முடிகிறது. இது எமது ஆழமான வேரூன்றிய நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும். திறமையாளர்களை ஈர்ப்பதில் உன்னிப்பாகக் கட்டமைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் சமவாய்ப்பு, தகுதி மற்றும் பரஸ்பர மரியாதையை முன்னேற்றுவதில் எமது விடாமுயற்சியின் சான்று இதுவாகும். இது எமது வளர்ச்சிச் செயல்பாட்டில் யாரையும் நாம் விட்டுச் செல்லவில்லை என்பதை உறுதி செய்துள்ளது. ஒரு குழுவாக இந்தப் பயணம் தொடர்பில் நான் பெருமையடைவதுடன், எமது குழுவினர் அவர்களது முதன்மையான அணுகுமுறையாக DIMO வினை ஏராளமான வெற்றி மற்றும் செழிப்பை நோக்கி அழைத்துச் செல்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்றார்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

இரத்தினக்கல் அகழ்வு குவியல்களை
அகற்றிக்கொள்வதற்காக விலைக்கேள்வி கோரல்

10 இரத்தினக்கல் அகழ்வு மண் குவியல்களை

2021 டிசம்பர் மாதம் 24ஆம் திகதி
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின்
இரத்தினபுரி பிரதேச அலுவலக வளவில் நடைபெறும்

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
www.ngja.gov.lk

## Faculty of Arts, University of Jaffna
## Request for Expression of Interest(EOI)

**Assignment Title: Visiting Lecturer in Postgraduate Diploma in Education Programme**

Expression of Interest is invited from the eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach in Postgraduate Diploma in Education Programme. The Faculty of Arts wishes to keep a record of a pool of Visiting Lecturers.

**Education Qualifications:** M.Phil in Education or above from the recognized University (approved by the UGC)

**Experience:** 05 years in teaching profession

Those who are interested shall send their expression of interest to the Dean, Faculty of Arts, University of Jaffna along with curriculum vitae(CV) and supporting documents related to educational qualifications and teaching experience by registered post on or before 22nd December 2021.

Candidates are expected to mention the field of specialization which can be taught by them in the Postgraduate Diploma in Education Programme, in the CV.

**Registrar,**
**University of Jaffna.**

அத கோடிபதி
ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.15
சீட்டிழுப்பு இல: 1420
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,127,540/-
வெற்றி இலக்கங்கள்
08 28 48 50 Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி : 2021-12-15
வெற்றி வாரம் : 1794 / வர்ணம் : செம்மஞ்சள்
சுப்பர் ஜக்பொட் ரூ. 28,867,628/-
வெற்றி இலக்கங்கள்
02 24 52 61 N
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,383,200/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,990,456/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
திகதி : 2021-12-15
வெற்றி வாரம் : 3306
வர்ணம் : பச்சை
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது
ரூ. 3,761,510/-
வெற்றி இலக்கங்கள்
09 31 51 59
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,389,650/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 110
சீட்டிழுப்பு திகதி 2021.12.15
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்
32 43 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,564,660/-
09

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.15
சீட்டிழுப்பு இல: 3755
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,399,180/-
வெற்றி இலக்கங்கள்
19 33 40 59 W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1594
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2021.12.15
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
C 20 49 65 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,119,580/-
அபிவிருத்தி லொத்தர் சபை

# ஜனவரியில் ஒமிக்ரோன் ஆதிக்கம்

## ஐரோப்பிய ஆணைக்குழு அச்சம்



வரும் ஜனவரி மாத மத்தியில், விரைவாகப் பரவும் தன்மை கொண்ட ஒமிக்ரோன் வகை கொரோனா ஐரோப்பிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் என ஐரோப்பிய ஆணைக்குழு அச்சம் தெரிவித்துள்ளது.

27 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாகப் பிரிவான அந்த அமைப்பின் தலைவர் உர்சுலா வாண்டெர் லேயென் கூறியதாவது;

ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் ஒமிக்ரோன் வகை கொரோனா மிக விரைவாகப் பரவும். வரும் ஜனவரி மாத மத்தியில், பிற வகை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை விட, ஒமிக்ரோன் தொற்று ஏற்பட்டவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள்.

எனினும் 66.6 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தியுள்ளதன் மூலம், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒமிக்ரோனை எதிர்கொள்ள நன்கு தயாராக உள்ளன.

அந்தவகை கொரோனா அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான வலிமையும் மனோதிடமும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உள்ளது.

எனினும், ஒமிக்ரோனால் புத்தாண்டு மற்றும் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு இடையூறு ஏற்படுவது வருத்தமளிக்கிறது என்றார் அவர்.

ஐரோப்பிய பிராந்தியத்தில் புதன்கிழமை நிலவரப்படி 7,89,03,419 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 14,71,809 பேர் அந்த நோய்க்கு பலியாகியுள்ளனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# சீனத் தடுப்பூசி ஒமிக்ரோனை கட்டுப்படுத்தாது

## ஹாங்காங் பல்கலைக்கழகம் தகவல்



கொவிட் வைரஸை தடுக்க சீனாவின் 'சினோவேக் பயோடெக்' நிறுவனம் தயாரித்த 'கொரோனாவேக்'தடுப்பூசியை கோடிக்கணக்கான மக்கள் உலகில் போட்டுள்ளனர். அத்தடுப்பூசி தற்போது பரவி வரும் ஒமிக்ரோன் வைரஸுக்கு எதிராக போதுமான நோய் எதிர்ப்பாற்றலை உண்டாக்கவில்லை என ஹாங்காங் ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

கொவிட் பெருந்தொற்றை முடிவுக்கு கொண்டுவர விஞ்ஞானிகள், மருத்துவர்கள், உலக நாடுகளின் அரசாங்கங்கள் போராடி வரும் சூழலில் ஒமிக்ரோன் எனும் புதிய உருமாறிய கொவிட் வகை பரவத் தொடங்கியுள்ளது. அதைப் பற்றிய ஆய்வுகள் பல்வேறு நாடுகளிலும் நடக்கின்றன.

ஜப்பானின் சமீபத்திய ஆய்வு ஒமிக்ரோன் வகையானது, டெல்டா வைரஸை விட நான்கு மடங்கு வேகமாக பரவக்கூடியது என கூறியுள்ளது. 2 தடுப்பூசி போட்டு 6 மாதங்களுக்கு மேல் ஆனவர்கள் பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொள்ளுமாறு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற வளர்ந்த நாடுகள் அறிவுறுத்துகின்றன.

இந்நிலையில் ஹாங்காங் பல்கலைக்கழகத்தின் தொற்றுநோய்கள் பிரிவின் பேராசிரியர் குவாக் யுங் யுயென் தலைமையில் 50 பேர் கொண்ட குழுவினரை இரு பிரிவாகப் பிரித்து ஆய்வு செய்தனர். முதல் 25 பேர் சீனாவின் சினோவேக் தடுப்பூசி பெற்றவர்கள். மற்றொரு 25 பேர் பைசர் தடுப்பூசி பெற்றவர்கள். அதில் சினோவேக் பெற்றவர்களின் இரத்த சீரத்தில் ஒமிக்ரோனை கட்டுப்படுத்த போதுமான அன்டிபாடிகள் எதுவும் இல்லை என தெரியவந்துள்ளது. பைசர் தடுப்பூசி பெற்றவர்களில் 5 பேரின் உடலில், அதாவது 257 பேரிடம் ஒமிக்ரோனை சமாளிக்கும் அன்டிபாடிகள் இருந்ததாக தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இது ஆரம்பக்கட்ட ஆய்வுகள்தான் என ஆய்வுக் குழுவினர் அறிவித்துள்ளனர். நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஆயுதமாக கருதப்படும் டி-கலம்கள் ஒமிக்ரோனுக்கு எதிராக எவ்வாறு செயல்புரிகின்றன என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இதுவரை சீனாவின் தடுப்பூசி அந்நாட்டிலும், பல்வேறு உலக நாடுகளிலும் 230 கோடி டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் முகக்கவசம் உள்ளிட்ட பழைய வழிமுறைகளையே மீண்டும் தீவிரமாக பின்பற்ற வேண்டியிருக்கும்.

# அணுசக்தி நிலையத்தில் கண்காணிப்பு கமராக்கள்

## ஐ.நா.வுக்கு ஈரான் அனுமதி



தங்களது அணுசக்தி நிலையத்தில் புதிய கண்காணிப்பு கமராக்களைப் பொருத்த ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்புக்கு (IAEA) ஈரான் அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அரசு சார்பு செய்தி நிறுவனமான இஸ்னா கூறியதாவது;

கராஜ் நகர் அருகே அமைந்துள்ள யுரேனியத்தை செறிவூட்டும் கருவிக்கான பாகங்களைத் தயாரிக்கும் ஆலையில், IAEA பொருத்தியுள்ள கண்காணிப்பு கமராக்கள் சில பழுதாகியுள்ளன.

அவற்றை மாற்றிவிட்டு புதிதாக கமராக்களைப் பொருத்திக்கொள்ள IAEA வுக்கு ஈரான் அரசு அனுமதி அளித்துள்ளது என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கராஜ் அணுசக்தி மையத்தில் மர்மமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதற்கு இஸ்ரேலின் சதிச் செயல்தான் காரணம் என்றும் ஈரான் கடந்த ஜூன் மாதம் குற்றம் சாட்டியது.

அதனைத் தொடர்ந்து, அந்த மையத்தில் பழுதான IAEA வின் கண்காணிப்பு கமராக்களை மாற்றிக்கொள்ள அந்த அமைப்புக்கு ஈரான் அனுமதி மறுத்து வந்தது.

இந்தச் சூழலில், IAEA வுக்கும் ஈரான் அணுசக்தி அமைப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இருதரப்புக்கும் திருப்தியான உடன்பாடு எட்டப்பட்டதாக ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹுசைன் அமீரப்துல்லா புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, ஈரானின் இஸ்னா மற்றும் தஸ்னிம் செய்தி நிறுவனங்கள் இத்தகவலைத் தெரிவித்துள்ளன.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக்கொண்டன. ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது கையெழுத்தான இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்துவந்த ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். அத்துடன், ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது மீண்டும் விதித்தார்.

அதற்குப் பதிலடியாக, ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இதனால் அந்த ஒப்பந்தம் முறிந்துபோகும் அபாயம் நிலவி வருகிறது. எனினும், அமெரிக்காவின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன், ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தச் சூழலில், ஒப்பந்தத்தை பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தை வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் பல கட்டங்களாக நடைபெற்று வருகிறது.





# மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் விளையாடும் 'கொரோனா'



மேற்கிந்தியத் தீவுகள் அணி, பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ரி-20, 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது. அனைத்து ஆட்டங்களும் கராச்சியில் நடைபெறுகின்றன. முதல் இரு ரி- 20 ஆட்டங்களை வென்று ரி -20 தொடரைக் கைப்பற்றியுள்ளது பாகிஸ்தான் அணி. 3 ஆவது ரி-20 ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த ஷெல்டன் காட்ரெல், ராஸ்டன் சேஸ், கைல் மையர்ஸ் ஆகிய 3 வீரர்கள் ஏற்கனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 3 வீரர்கள் உட்பட 5 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஷாய் ஹோப், அகேல் ஹுசைன், ஜஸ்டின் கிரீவ்ஸ் ஆகிய மூன்று மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களால் இந்தச் சுற்றுப் பயணத்தின் மீதமுள்ள ஆட்டங்களில் விளையாட முடியாது.

ஏற்கனவே 3 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த மேலும் 5 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள ஆட்டங்கள் நடைபெறுமா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

# ரங்கன ஹேரத்திற்கு கொரோனா தொற்று



இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும் தற்போதைய பங்களாதேஷ் அணியின் சுழற்பந்து வீச்சு பயிற்சியாளருமான ரங்கன ஹேரத்திற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தற்போது பங்களாதேஷ் அணியுடன் நியூஸிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

எனினும் பங்களாதேஷ் அணி வீரர்களுக்கோ அல்லது பயிற்சி ஊழியர்களுக்கோ கொரோனா தொற்று ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# ஆஷஸ் பகலிரவு டெஸ்டிலிருந்து ஆஸி. அணி கப்டன் விலகல்



அடிலெய்டில் நடைபெற்று வரும் ஆஷஸ் பகலிரவு டெஸ்டிலிருந்து அவுஸ்திரேலிய அணி கப்டன் பட் கம்மின்ஸ் விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆஷஸ் தொடர், இந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. ஆஷஸ் தொடர், ஜனவரி 18 அன்று முடிவடைகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டை ஆஸி. அணி எளிதாக வென்றது.

2 ஆவது டெஸ்ட், பகலிரவு ஆட்டமாக அடிலெய்டில் நடைபெறுகிறது.

இந்நிலையில் கொரோனா அச்சம் காரணமாக ஆஸி. கப்டன் பட் கம்மின்ஸ், அடிலெய்ட் பகலிரவு டெஸ்டிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக பிரபல வீரர் ஸ்டீவ் ஸ்மித் ஆஸி. கப்டனாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை அன்று அடிலெய்டில் உள்ள உணவு விடுதிக்குச் சென்றார் கம்மின்ஸ். அப்போது அவர் உணவு அருந்திய மேஜைக்கு அருகில் இருந்தவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2 ஆவது டெஸ்டிலிருந்து கம்மின்ஸ் விலகியுள்ளார். கொரோனா பரிசோதனையில் கொரோனா தொற்று இல்லை என முடிவு வந்தாலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவருடன் தொடர்பில் இருந்ததால் கம்மின்ஸ், ஏழு நாட்களுக்குத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

# பொய் சொல்வது கங்குலியா? கோஹ்லியா?



கோஹ்லி- ரோஹித் விரிசல் திசைமாறியுள்ளது. இப்போது கோஹ்லி- கங்குலி மோதலாக உருவெடுத்துள்ளது.

இந்திய கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டாம் என தன்னிடம் கங்குலி கேட்டுக்கொள்ளவில்லை என கோஹ்லி தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்கா செல்லும் இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்கான இந்திய அணி கிளம்பிச் சென்றது. டெஸ்ட் அணி கப்டனாக கோஹ்லி தொடர்கிறார். துணைக் கப்டன் பொறுப்பு ரோஹித் சர்மாவுக்கு தரப்பட்டது.

ஒருநாள் தொடருக்கு கோஹ்லிக்கு பதில் ரோஹித் சர்மா புதிய கப்டனாக நியமிக்கப்பட்டார். பதவியில் தொடர விருப்பம் தெரிவித்தபோதும், இந்திய கிரிக்கெட் சபை(பி.சி.சி.ஐ.) இப்படிச் செய்ததால் கோஹ்லி கோபம் அடைந்தார்.

தொடையின் பின்பகுதி காயத்தால் டெஸ்ட் தொடரில் இருந்து விலகுவதாக ரோஹித் அறிவித்தார். இதன்மூலம் கோஹ்லி தலைமையில் டெஸ்டில் விளையாடுவதை தவிர்த்தார். மறுபக்கம் குடும்பத்துடன் நேரத்தை செலவிட விரும்புவதால் தனக்கு ஓய்வு அளிக்கும்படி கோஹ்லி கேட்டதாக செய்தி வெளியாகிது. இதனிடையே கோஹ்லி பதவி விலகிய போது, பி.சி.சி.ஐ. தலைவர் கங்குலி, கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டாம் என தனிப்பட்ட முறையில் கேட்டுக் கொண்டேன் என்றார்.

இதனிடையே மும்பையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கோஹ்லி கப்டன் பதவியில் இருந்து விலக முடிவு செய்ததும் இதுகுறித்து பி.சி.சி.ஐ. யிடம் தெரிவித்தேன். இந்திய கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டாம் என தன்னிடம் கங்குலி கேட்டுக் கொள்ளவில்லை என்றார்.

# தென்னாபிரிக்கா புறப்பட்டது இந்திய அணி

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடுகிறது.

டெஸ்ட் தொடர் டிசம்பர் 26 அன்றும் ஒருநாள் தொடர் ஜனவரி 19 அன்றும் தொடங்குகின்றன. ஒருநாள் தொடருக்கு கப்டனாகவும் டெஸ்ட் தொடருக்கு துணை கப்டனாகவும் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

மும்பையில் வலைப்பயிற்சியில் ஈடுபட்டபோது ரோஹித் சர்மாவுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் தொடரிலிருந்து அவர் விலகியுள்ளார். ரோஹித்துக்குப் பதிலாக ப்ரியங் பஞ்சால், இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் மும்பையில் மூன்று நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டார்கள். இந்நிலையில் நேற்று மும்பையிலிருந்து தனி விமானம் மூலமாக தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது இந்திய அணி. விமானத்தில் இருக்கும் இந்திய வீரர்களின் புகைப்படத்தை பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ளது. பயிற்சிகள், ஆட்டங்கள் எதுவுமின்றி டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது இந்திய அணி.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road on Friday 17th of December 2021.